விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 03 | சனிக்கிழமை (18.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 365

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

## யுத்தத்துக்கு பச்சைக்கொடி காட்டி மக்களைப் பலிகொடுக்கத் திட்டம்!

### அரசு சூழ்ச்சி என்று கருஜெயசூரியா எச்சரிக்கை

(புத்தளம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நாட்டு மக்களை பலிகொடுக்க திட்டம் தீட்டி வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா கடும் தொனியில் எச்சரித்துள்ளார்.

புத்தளம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வல்குறுல காபியின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

கடந்த ஆட்சியில் மக்கள் சமாதானத்துடன் வாழ வழிகாட்டும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி சமாதான முயற்சிக்கு முதன்மை அளித்தது.

ஆனால் தற்போது சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதானத்தை தவிடுபொடியாக்கிவிட்டு யுத்தத்தை ஆரம்பித்து, மக்களை பலிகொடுக்கத் தயாராகிவருகிறது.

இதனை வடக்கு தெற்கு மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். அரசின் கபடச் சூழ்ச்சிக்குள் மக்கள் அகப்பட்டுவிடக் கூடாது என்றும்30 இலட்சம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை அரசாங்கம் பழி வாங்க திட்டமிட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நாவலடியில் கிரனைட்டுடன் இளைஞன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை நாவலடியில் இளைஞர் ஒருவர் இரண்டு கிரனைட்டுக்களுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனையிலிருந்து வாகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை பொலிஸார் சோதனையிட்டபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு கானான் கேணியைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி தர்மகுமார் (வயது 25) எனத் தெரிய வருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் துணுக்காயைச் சேர்ந்த திபாகரன் (வயது 20) என்ற இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் 7 இலட்சத்து 52 ஆயிரம் ரூபா பணம் வைத்திருந்தார். அதிகளவு பணம் வைத்திருந்த சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(ச)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியமர அனுமதிக்குக

### ஜனாதிபதியை தமிழர் ஆசிரியர் சங்கம் நேரில் வலியுறுத்து

(கொழு ம்பு)

**வடக்கு கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் உடனடியாக மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் எஸ். மகாசிவம் நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளார்.**



ஜனாதிபதி மாளிகையில் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து தமது சங்கப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது சங்கத்தின் செயலாளர் மகாசிவம் மற்றும் நிதிச்செயலாளர் தர்மராஜா ஆகியோர் ஜனாதிபதியுடன் தனியாகப் பேசும்போதே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

வடக்கு கிழக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உடனடியாக மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் அல்லது அவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படும்வரை அவர்களுக்கு நஷ்டஈடு அல்லது குத்தகை அல்லது வாடகை ஆகியவற்றையாவது வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாடச் சென்ற சிறுவன் கேணியில் சடலமாக மீட்பு!

### பருத்தித்துறையில் சம்பவம்

(பருத்தித்துறை)

வீட்டிலிருந்து விளையாடவெனக்கூறிவிட்டுச் சென்ற சிறுவன் மறுநாள் காலை கேணியிலிருந்துசடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இத்துயர சம்பவம் பருத்தித்துறையில் இடம்பெற்றது. சம்பவத்தில் பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலாயுதம் மகாவித்தியாலய மாணவனான தேவராஜா தேவகுமார் (வயது 13) என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நண்பர்களுடன் விளையாடச் செல்வதாக கூறிவிட்டு மேற்படி சிறுவன் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து சென்றுள்ளார். ஆனால் அன்று மாலை வீடு திரும்பவில்லை. பிரஸ்தாப சிறுவன் தனது பேர்த்தியின் வீட்டிற்குச் செல்வது வழக்கம். அன்றும் பேர்த்தியாரின் வீட்டிற்குச் சென்றதாலேயே மகன் வீடு திரும்பவில்லை என்று எண்ணி அவனின் பெற்றோர் தேடுதல் எதையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், நேற்று வியாபாரிமூலை விநாயகர் ஆலய கேணிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)


## சொல்ஹெய்ம் - ஹக்கீம் நேற்று சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் நேற்றுக்காலை சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளார்.

இச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது...

## தொடரப்போவது போரா! சமாதானமா!

## புரியாத சலிப்புடன் எரிக் நேற்று நோர்வே பயணம்!

(கொழும்பு)

அரசிற்கும், விடுதலைப் புலிகளிற்குமிடையிலான சமாதான முயற்சிகளின் தேக்க நிலையை போக்கி அதில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், சந்திப்புக்களில் பயன் எதுவும் ஏற்படாத நிலையில் சலித்துப் போன மனநிலையுடன் நேற்று நோர்வே பயணமானார்.

சமாதான முயற்சிகளில் நீண்டகாலமாக தொடரும் தேக்க நிலையை நீக்கும் வகையில் அரசாங்கத்துடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மாறி மாறி பேச்சுவார்த்தை நடத்தினார்.

எனினும் இச் சந்திப்புகளில் சமாதான முயற்சியைத் தொடர்வது குறித்து உருப்படியான எந்த ஒரு முடிபும் தீர்க்கமாக எடுக்கப்படவில்லை.

நோர்வேயின் சமாதான முயற்சி வெற்று முயற்சியாகவே தொடரும் நிலையில் எரிக்சொல் ஹெய்மின் இவ்வார சந்திப்புகளும் பயனேதுமின்றியும் முடிபின்றியும் வழமையான சந்திப்புகளாகவே அமைந்துவிட்டது.

இந் நிலையில் சமாதான முயற்சி தொடர்பில் புதிய ஆக்கபூர்வமான செய்தியோ அல்லது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலத்திரனியல் வாக்களிப்பு முறை இலங்கையில் அறிமுகமாகுமாம்

### தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் இலத்திரனியல் (கணனி ஊடாக) வாக்களிப்பு முறை அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இலத்திரனியல் வாக்களிப்பு முறை பற்றி இந்தியாவில் பிரத் எலக்ரோனிக் நிறுவனத்தின் உதவியுடன் செய்முறை விளக்கமளித்தார். இலத்திரனியல் வாக்களிப்பு முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டால் ஒவ்வொரு தேர்தலிலும் 22 கோடி ரூபா மீதப்படுத்த முடியும். மோசடிகளைத்தடுக்க முடியும். தேர்தல் முடிபுகளை தாமதமின்றி வெளியிட முடியும். குறைந்தளவு ஊழியர்களே தேர்தல் பணிகளுக்கு தேவைப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இயந்திரம் ஒன்றின் விலை 22 ஆயிரம் ரூபா என்றும் இந்த வாக்களிப்பு முறையை அமுல்படுத்தப்படுவதற்கு முதல் தேர்தல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

(இ-04)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று ஒரு தகவல்

## கழுதையும் கற்றுக்கொடுக்கும்

ஒரு சராசரி மனிதனின் இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக்குதிப்பான். துன்பம் வந்தால் சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து விடு வான். இவன் தான் சராசரி மனிதன். ஆனால் ஒரு வன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்வடை வதில்லை. துன்பம் வந்தால் அதற்காக சோர்ந்து விடு வதில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இருந்தால் அவன் சாதாரண ஆளில்லை.

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடிக் கொண்டு ஒரு பெரியவர் வந்தார். “ஐயா! ஞானத் தில் சிறந்த ஞானம் எது?'' என்று கேட்டார். இதற்கு அந்த ஞானி என்ன பதில் சென்னார் தெரியுமா? “இன்பத் தினால் மகிழ்ச்சியடையமாலும் துன்பத்தினால் சோர்வடை யாமலும் இருப்பது தான் அது '' என்றாராம். “சரி சுவாமி அப்படிப்பட்ட ஞானம் உங் களுக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டிருக்கிறார் இவர். “அதை ஒரு கழுதையிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன்'' என்றாராம் அவர்.

இவருக்கு ஒன்றும்புரியவில்லை. ஒரு மாதிரி முழித்திருக்கிறார். இதை அவர் புரிந்துகொண்டார்.“ நீங்கள் நாளை காலையில் நமது ஆசிரமத்திற்கு வாருங்கள் புரிய வைக்கிறேன்'' என்றார். சரி என்று இவர் போய்விட்டார்.

மறுநாள் காலையில் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந் தார். ஞானி அவரைக்கூப்பிட்டு உட்கார வைத தார். “வாருங்கள் வந்து இப்படி உட்காருங்கள். சிறிது நேரத்தில் இந்த வழியாக ஒரு கழுதை போகும அதைக் கவனியுங்கள்'' என்றார். இவருக்கு இன்னும் ஒன்றும் புரியவில்லை. குழப்பமாக இருந்தது. இருந் தாலும் அந்த ஞானி சொன்னது போலவே உட்கார்ந் திருந்தார்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக ஒரு கழுதை சென்றது. அதன் முதுகில் நிறைய அழுக்குத் துணி கள். அதைச் சுமந்துகொண்டு போகின்றது. ஒரு சல வைத்தொழிலாளி அதை ஓட்டிக்கொண்டு போகிறார். சிறிது தூரத்தில் ஒரு ஆறு இருக்கிறது. அங்கே போய் துணிகளைச் சுத்தம் செய்து விட்டு பின்னேரம் திரும்பி வருவார்.

ஞானி சொன்னது போலவே இந்தப்பெரியவர் அழுக்கு மூட்டையைச் சுமந்து செல்லும் அந்தக் கழுதையைக் கவனித்தார். கழுதை போய்விட்டது. அதன் பின் ஞானியைத் திரும்பிப்பார்த்தார். இப்போது அந்த ஞானி சொன்னார். “பின்னேரம் வரைக்கும் நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும்'' என்றார். அதே மாதிரி இவரும் இருந்தார்.

மாலை நேரம் அந்த ஞானி சொன்னார் “ஐயா... இப்போது சிறிது நேரத்தில் அந்தக்கழுதை இந்த வழியாகத் திரும்பிவரும் அதையும் கவனியுங்கள் '' என்றார். இவரும் கவனித்தார். கழுதை வந்தது. அதன் முதுகில் சலவை செய்யப்பட்ட துணி மூட்டை. அது தன்பாட்டுக்கு அவற்றைச்சுமந்து கொண்டு போனது. பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுமை யிழந்து விட்டார்.

சரி சுவாமி. இந்தக்கழுதைக்கும் உங்கள் ஞானத் திற்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டார். இப்போது அந்த ஞானி சென்னார். “ஐயா இந்தக் கழுதை இதே மாதிரித் தினமும் காலையில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு ஆற்றுக்குப் போகிறது. மாலையில் வெண்மையான, சுத்தமான துணிகளைச் சுமந்து கொண்டு ஊருக்குத்திரும் பிப் போகிறது.

காலையில் போகும்போது முதுகில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்துகொண்டு போகிறோமே என்ற வருத்தமும் அதற்கு இல்லை. மாலையில் திரும்பி வரும்போது சுத்தமான துணிகளைச் சுமந்துகொண்டு வருகினறோமே என்ற மகிழ்ச்சியும் இல்லை. இதைப் பார்த்துத்தான் நானும் அதுபோன்ற ஞானத்தைக் கற்றுக்கொண்டேன்'' என்றார்.

அதனால் யார் கற்றுக்கொடுக்கிறார் என்பதை விட எதைக்கற்கிறோம் என்பது தான் முக்கியம். ஒரு திரைப்படம் பார்க்கிறோம். ஒரு அருவி கொட்டு வது போல் காட்சி வருகிறது. தண்ணீர் வழிகிறது. படம் முடிந்ததும் அந்தத். திரை நனைந்து போயா இருக்கும்? ஒரு தீப்பிடித்து எரியும் காட்சியைப் பார்க்கிறீர்கள். காட்சி முடிந்ததும் அந்த வெண்திரை கருகிப் போயா இருக்கும்? படத்தில் வரும் தண்ணீரும் நெருப்பும் அந்தத் திரையைப் பாதிப்பதில்லை. நாம் அந்தத்திரை யைப போல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பக்குவம் வந்துவிட்டால் இன்பமும் துன்பமும் நம்மை ஒன்றும் செய்துவிடமுடியாது.

ஒரு படத்தை பார்க்கும் வரை சிரிக்கலாம், அழ லாம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது அழுது கொண்டே வரக்கூடாது. ஒருத்தர் அப்படி வநதார். படம் முடிந்து வெளியே வரும்போது அருவி போலக் கண்ணீர் சிந்திக் கொண்டே வெளியே வந்தார். “ஏன் சார் படம் மிகவும் சோகமா? '' என்று கேட்டார் இன்னொருவர். “இல்லை சார்! கூட்டம் மிகவும் குறைவு சார். மொத்தமா கப் படம் பார்க்க வந்தவர்களே 15 பேர் தான் சார்'' என்றார். கண்ணரைத் துடைத்துக்கொண்டே “அதற்கு ஏன் சார் நீங்கள் அழுகிறீர்கள்?'' என்றார் இவர். “இந்தப் படத் தின் தயாரிப்பாளரே நான் தான் சார்''என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வட- கிழக்கை துரித அபிவிருத்தியடையச் செய்ய புலிகளுடன் இணைந்து செயற்படுவதே சிறந்தது

## வட-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் தெரிவிப்பு





(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண புதிய ஆளுநராகப் பதவி யேற்றுள்ள டிரோன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள வடக்கு- கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகத்தில் வைத்து மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரி களையும் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடியுள் ளார்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், விடுதலைப் புலி களின் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பல்ல எனத தெரிவித்துள்ளதுடன், இவர்களுடன இணைந்து செயற்படுவதன் மூலம் மாகாணத்தின் அபிவிருத்தி மற் றும் புனர்வாழ்வு , புனரமைப்புப் பணிகளை இலகு வாக மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனர மைப்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொண் டால் யுத்தமும் ஏற்பட வாய்ப்பில்லை. பிரிவினை யும் ஏற்பட வாய்ப்பில்லை.

இத்தகைய பணிகளில் மாகாண அதிகாரி கள் முழுமூச்சுடன் செயற்பட வேண்டுமெனக கேட்டுக் கொண்டார்.

இதனையே வடக்கு-கிழக்கில் வாழும் அனைத் துத் தமிழ் மக்களும் எதிர்பார்த்துள்ளனர். அதனையே நாம் இனிவரும் காலங்களில் உடன டியாக மேற்கொள்ளவுள்ளோம்.

விடுதலைப்புலிகளின் பகுதிகளிலும் நாங்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள ளோம். இதற்கு மட்டும் விடுதலைப்புலிகளின் உதவியுடன், வடக்கு- கிழக்கின் முழு அபிவி ருத்திக்கு எவ்வாறு நிதி ஒதுக்கீடுகளை மேற் கொள்வது எனவும் ஆலோசனை பெறப்படவுள் ளது.


இதற்கு அவர்கள் தமது பூரண ஒத்துழைப் பினை நல்குவர் என டிரோன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (ந-4)

# இலங்கை-இந்திய கூட்டுப் பயிற்சி சமாதானத்தை பாதிக்கும் நடவடிக்கை

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

(கொழும்பு)

இலங்கை- இந்திய கடற்படைகளின் கூட்டுப்பயிற் சியானது சமாதானத்தைப் பாதிக்கும் ஒரு நடவடிக் கை என கடற்புலி களின சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள் ளார்.



கடற்புலிகளின் மூத்த உறுப்பினர் லெப். கேணல் மறவனின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரை நிகழ்த்தும் போதே கேணல் சூசை இவ்வாறு தெரிவித்தார்.

லெப.கேணல் மறவன் கடற்புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். தமிழீழத் தில் ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிராக நடத்தப் பட்ட பல தாக்குதலகளில் இவரது பணி மிக வும் மகத்தானது.

ஆனையிறவு உட்பட பல தாக்குதல்களில் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்க நடவடிக்கை களில் மறவன் மிக அற்புதமாக உழைத்தவர். இவரது இழப்பு எமக்குப் பேரிழப்பாகும் என வும் தெரிவித்தார்.

நேறறு முன்தினம் பிற்பகல் வடமராட்சியில் இடம்பெற்ற மறவனின் இறுதி வணக்க நிகழ்வு கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப் பாளர் சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

ஈகைச் சுடரினை லெப். கேணல் மறவனின் துணைவியார் ஏற்றிவைத்தார். மலர் மாலை யினை தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் ப.நடேசனும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ஆகியோரும் அணிவிததனர்.

இறுதிவணக்க நிகழ்வு இடம்பெற்றதை அடுதது லெப். கேணல் மறவனின் வித்துடல் உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

கடற் தொழிலாளர்கள், சமாச உறுப்பினர் கள், பொதுமக்கள், போராளிகள், பொறுப்பாளர் கள, தளபதிகள் எனப் பலர் இவ் இறுதிவணக்க நிகழ் வில் கலந்துகொண்டனர். (ந-4)

# இராசிபலன்

**18.12.2004**
**(மார்கழி 3 சனிக்கிழமை)**
**சப்தமி பி.ப 4.58 மணிவரை**
**பூரட்டாதி பி.இ. 4.26 மணிவரை**
**இராகுகாலம் 9.23 - 10.53 மணிவரை**
**சுபநேரம் 3.23- 4.53 மணிவரை**
**திருவெம்பாவை பூசை ஆரம்பம்**

**மேடம்** பிரபுத்தனம், இஷ்ட சித்தி, ஆரோக் கியம், மனமகிழ்ச்சி.

**இடபம்** புத்திரரால் கவலை, காரிய தாமதம், அதிகசெலவு, நல்ல முயற்சி.

**மிதுனம்** அஜீரணக் கோளாறு, மனக்கவலை, பொருள் விரயம், உறவினர் வெறுப்பு.

**கடகம்** கீர்த்தி, மாதர் நட்பு, முயற்சி கைகூடும், உற்சாகம்.

**சிங்கம்** ஆரோக்கியம், நண்பர்கள் உதவி, தொழில் சிந்தை, போசன சுகம்.

**கன்னி** அஜீரண ரோகம், காரிய இடையூறு, சொத்துப் பிணக்கு, தாழ்ந்த சுபாவம்.

**துலாம்** புத்தி சஞ்சலம், வீண் பிரச்சினை, தொழிலில் ஆர்வம், உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்** நற்கீர்த்தி, மாதர் நட்பு, உற்சா கம், போசன நன்மை.

**தனுசு** உணர்ச்சி வசப்படுதல், பண விரயம், கௌரவக் குறைவு, ரோக நிலை.

**மகரம்** வெகுமானம், சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, விருந்துபசாரம்.

**கும்பம்** சயன சுகக் குறைவு, சுப செலவு, காரிய தாமதம், சோம்பல் நிலை.

**மீனம்** குடும்ப மகிழ்ச்சி, விருந்தினர் வருகை, காரிய அனுகூலம், தெய்வசிந்தை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்திற்காக உலகவங்கி ஏழரைக் கோடி டொலர் கடனுதவி

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்கள் பயனடையும் வீட மைப்பு அபிவிருத்தித் திட்டத்துக்காக உலக வங்கி ஏழரைக் கோடி டொலர்களை இலங் கைக்குக் கடனாக வழங்கவிருக்கின்றது.

இந்தக்கடன் தொகையைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கில் 46ஆயிரம் வீடுகள் அமைக் கப்படும் என உலகவங்கி தெரிவித்துளளது.

இதற்காக அமுல்செய்யப்படும் 4 ஆண்டுத் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் தத்தமது வீடுகளைப் புனர மைத்துக் கொள்வதற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் மிகவும் வறிய நிலையில் உள்ளவர்கள் பயனடையவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி நெகிழ்வுப் போக்கினை கடைப்பிடிக்கிறார்

## யாழ்.அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

(யாழ்ப்பாணம்)

**கடந்த இருபது வருடங்களாக நீடித்திருந்த தொடர் யுத்தம் காரணமாக மக்கள் போதியளவு துன்பங்களையும், துயரங்களையும், அவலங்களையும் தாங்கியிருந்தமையினால் இனியும் காலதாமதமின்றி நாட்டின் இனப் பிரச்சினைக்கு உடனடியாக நிலையான நீடித்த இணக்கப்பாடான தீர்வு அவசியம் காணப்பட வேண்டும். இன்றைய நிலையில் தேச நலனை மையமாகக் கொண்டு இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டியமை காலத்தின் கட்டாயமாகவுள்ளது.**

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையததினால் வெளியிடப்பட்ட நிலவர அறிக்கையில் சுட்டிக்காட்டபபட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது இன்று ஒரு பொதுவான நிலைப்பாடாகவுள்ளது. சமாதானத்துக்கானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பதில ஏற்படுகின்ற தாமதம் மக்கள் மத்தியில் பெரும் கவலையையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. நாடு மீண்டும் யுத்தத்தை நாடிப் போகுமாயின் நாட்டின் எதிர்காலமும், எதிர்கால சநததியும் நிச்சயம் அழிந்து விடக் கூடிய நிலை ஏற்படும்.

நாம சமாதானத்தைத் தேடுவதற்கான திருப்பு முனையில் இன்று நிற்கின்றோம். ஜனாதிபதி இது விடயத்தில் வார்த்தையிலும், நடவடிக்கையிலும் நெகிழ்வுத் தன்மையைக் காட்டி வருகின்றார். அதேசமயம் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் எதிர்க்கட்சி தனது சம்மதத்தைத் தெரிவித்து வருகின்றது. அததோடு, தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது தயார் நிலையை வெளிப்படுத்தி வருகின்றனர். ஏனவே நோர்வே இவ் இலகுத் தன்மையைப் பாவித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும்.

மேலும், கடந்த பத்து வருடங்களாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்குவதில் காட்டப்பட்டு வந்த பின்னடிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியமை குறித்து யாழ்ப்பாண மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவதில் இருந்து விலகி வேலையற்றிருக்கும் இளம் சந்ததியினருக்குத் தொழில வாய்ப்புக்களை வழங்கும் நிலையைத் தோற்றுவிக்கவேண்டும்.

### கல்வியியற் கல்லூரிக்கு கண்டனம்

யாழப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்களின் தொடர்சசியான கல்விப் பயிற்சிக்கு கல்லூரி நிர்வாகம் திட்டமிட்ட முறையில் தடைவிதித்து, மலசல கூட வசதிகள் இல்லை என்ற முறையில் ஆண் மாணவர்களுக்கு கதவடைப்புச் செய்தமை கண்டிககத்தக்கதாகும். கல்லூரியின் மலசலகூட வசதிப பிரச்சினைக்கு உரியமாற்று நடவடிக்கைகளை நிர்வாகம் ஏலவே கண்டிக்க வேண்டும். கல்லூரி மாணவர்கள் நிர்வாகத்திறகு எதிராக அண்மையில் மேறகொண்டிருந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கான பழிவாங்கும் நடவடிக்கை இதுவென மக்கள் உணர்கின்றனர்.

### யாழ்.வைத்தியசாலை

ஜப்பான நாட்டு உதவியுடன யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இதுவிடயமாக இப்போதைய வைததியசாலை மிகவும் அமைதியான ஒரு இடத்துக்கு அவசியம் மாற்றப்படவேண்டும் என இணையம் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ளகநோயாளர்களைப் பராமரிக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ள சென்ஜோன்ஸ முதலுதவிப் படையைச் சேர்ந்த தொண்டர்களுக்கான கொடுப்பனவு 150 ரூபாவில் இருந்து 250 ரூபாவாக உயர்ந்தப்பட்டமையினால் உதவிகள், வசதிகளற்ற நோயாளர்களால் மேற்படி அதிகரித்த சேவைக்கட்டணத்தை வழங்க முடியாத நிலையில் பல நோயாளர்கள் உள்ளனர்.

மேலும் கடந்த மூன்று வருடங்களாக வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகத்தில் இயங்கிவந்த ஆயுர்வேத சிகிச்சை நிலையம் திடீரென மூடப்பட்டுள்ளது. இச் சிகிச்சை நிலையம் மூலம் 3 ஆயிரத்துக்கு மேறபட்ட குடும்பங்கள பயனடைந்துள்ளன. இன்று இச் சிகிச்சை நிலையமானது மூடப பட்ட நிலையிலேயே உள்ளது.

### போக்குவரத்தும் விபத்துக்களும்

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தானது இப்போது நாளாந்த சம்பவமாகிவிட்டது. இதன் பொருட்டு அப்பாவி மக்களின் பெறுமதிமிக்க உயிர்கள காவுகொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் மோட்டார் விபத்துக்களைக் கட்டுப்படுத்தல் குறித்துப் பல முக்கிய சந்திப்புக்கள யாழ்ப்பாண நிர் வாகமட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் தீர்க்கமான செயல் வடிவில் எதுவும் இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் இப்போதும் இயங்கிவரும் மினிபஸ்களுக்கான தரிப்பிடத்தை யாழ்ப்பாணம மைதானத்துக்குக் கொண்டு செல்லும் திட்டத்தினைவிரைவில் அமுல் செய்யவேண்டும்.

### சுற்றுச் சூழல் பாதுகாப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலரும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தென்மராட்சிப் பிரதேசததில் பனை மரங்களை முன் அனுமதியின்றி வெட்ட வேண்டாம் என அறிவுறுத்தல்களை விடுத்துள்ளன. பனை மரங்கள் வெட்டப்படவேண்டிய அவசியம் ஏற்படின் உரிய அனுமதிகள் பெறுப்பட்டே வெட்டப்பட வேண்டும்.

இந்த நிலவர அறிக்கையில் மீன்பிடி, புனர்வாழ்வு, கலாசார நிகழ்வுகள், மிதிவெடி அகற்றல் போன்றவிடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் கையொபபமிட்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

# எரிக்சொலுடன் பிரதமர் பேச்சு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனைச் சந்தித்த பின கொழும்புதிரும்பிய எரிக்சொல் ஹெய்ம் பிரதமரைச் சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது தமிழ்ச்செல்வனுடன் மேற்கொண்ட சந்திபபுககள் குறித்து எரிக்சொல் ஹெய்ம் பிரதமருக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை மேற்படி சந்திப்பின் போது, சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கபபடாமல் ஸ்தம்பிதமான நிலையிலேயே இருந்து வருவதால், வடக்கு-கிழக்கை புனரமைப்பது குறித்த விடயங்கள் தொடர்பாக பிரதமர், எரிக்சொல் ஹெய்முக்கு விளக்கமளித்தார்.

அழிவடைந்துள்ள வடக்கு-கிழக்கு மீளக் கடியெழுப்பவும் அப் பகுதிகளில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நிதிப்பற்றாக்குறையே முக்கிய தடையாக உள்ளதாக பிரதமர் மஹிந்த மேலும் எடுத்துக் கூறினார். (ற)

# பிராந்திய நாடுகளுக்கு சுதந்திரமாக பயணம் செய்ய பத்திரிகையாளர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

தெற்காசியப் பத்திரிகையாளர்கள் பிராந்திய நாடுகளிடையே சுதந்திரமாகப் பயணம் செய்ய அனுமதிப்பது குறித்து சார்க் அமைபபின் தகவல்துறை அமைசசர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற செய்தியாசிரியர்கள், உழைக்கும் பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் முன்மொழியப்பட்ட இது தொடர்பான யோசனைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவை தெற்காசியப் பிராந்தியத்தில் மக்கள் மத்தியில் தொடர்புகளை வளர்க்க, ஆக்கபூர்வமான அணுகுமுறையெனக் கருதப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இஸ்லாமபாத்தில் ஆரம்பமான தெற்காசிய தகவல்துறை அமைச்சர்கள் மகாநாட்டில், செய்தியாளர்களுக்கான விஸாக்கட்டுப்பாடுகளை தளர்த்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் கெனட் சபைததலைவர் முகமட் நியான் சுக்ரோ இதனை உத்தியோகபூர்வமாக அரம்பித்து வைத்தார்.

இம் மாநாட்டிற்கான இலங்கைத் தூதுக் குழுவுக்குத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் தெற்காசியப் பிராந்தியத்திலும் அதற்கப்பாலும் சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தை உறுதிசெய்யும் புதிய நடைமுறைகளை உள்ளடக்கிய திருத்தச் சட்டத்தை வரைவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருப்பதாகக் கூறினார்.

இத்தகைய செயற்றிட்டத்தை வகுக்கும் போது பிராந்தியததுன பிரததியேக [illegible] குணாதிசயங்களையும் தே[illegible]வகளையும் விழுமியங்களையும் கவனத்திற் கொளளுமாறு அமைச்சர் மஙகள சமரவீர சார்க் அமைப்பிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும், அவர் பேசும் போது, இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறினார்.

செய்தியாளர்களுக்கு அபராதம் விதித்து, சிறையில் அடைக்கக் கூடிய உரிமைகளை பாராளுமன்றத்திற்கு வழங்கும் சலுகைகள் தொடர்பாக விஷேட சட்டத்தைத் திருத்தி அமைப் பதற்கு 1997 ஆம் ஆண்டு அமைச சராக இருந்தபோது தாம் மேற்கொண்ட நட்வடிக்கைகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

ஒவவொரு பிரஜையும் கருத்து வெளியிடும சுதநதிரத்தை உறுதி செய்வதற்காகக் குற்றவியல் அவதூறுச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படடிருப்பதாகவும் அமைச்சர் மேலும சொன்னார்.

அடுத்த வருடம் மே மாதம் தேசிய தொலைக்காட்சி அலைவரிசைகளினூடாக சார்க் அமைப்பின் முதலாவது விவரணத்திரைப்பட விழா தொடர்பான நிகழ்வுகளை நேரடியாக அஞ்சல் செய்வதற்கும் அரசு முன்வந்திருப்பதாகவும் மங்கள சமரவீர தெரிவித்தார். (க-7)

# அறக் கொடை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது அகவை அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம்தகதி காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபததில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக மொறிசியஸ் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் தெ.ஈஸ்வரன் கலந்து கொள்வார்.

'சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரம்' என்ற 7 ஆம் திருமுறையும் 'வாழ்க எம் அன்னை' எனும் முத்தமிழ் விழா மலரும் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், வருடந்தோறும் வழங்கப்படும் அறக்கொடைத் திட்டத்தின் மூலம் இவ்வாண்டு யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சிவபாலனும், தெல்லிப்பழை வைத்தியசாலை டாக்டர் செலவி கனகரத்தினமும் அறக்கொடைகளைப் பெறவுள்ளனர்.

இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-7)

# எமது ஆதரவாளர்களைப் பலியெடுக்க அரசு முனைப்புடன் செயற்படுகிறது

## ஐ.தே.க.பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் '30 இலட்சம் ஆதரவாளர்களைப் பலியெடுக்கத் தயாராகிவருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களைப பலிகொள்ளுவதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை சிதைத்து விடலாமென கனவு காணுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் உறுதிமிக்க ஆதரவாளர்கள் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியினை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வார்கள் என நம்பிக்கை வெளியிட்டார். (ற-9)

மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்** 12

யாழ்ப்பாணத்திலே தமிழரசர் அரசாட்சிக் காலத்திலே அரசு புரிந்த அரசர் அனைவரும் சைவசமயத்தவர். குடி மக்களும் சைவர். அக்காலத்திலே அனேகம் சைவக் கோவில்கள் பிரதிட்டை செய்யப்பட்டன.அனேக கோவில் சுவாமிகள் ஆச்சரியப்படத்தக்க அருள்களைப் புரிந்திருக் கின்றனர். அவைகளை எல்லாம் நடுநிலைமை விலகாது கண்ட உண்மைகள்ளைக் கண்டபடி எழுதவல்ல ஆசிரியரைக் கொண்டே எழுதிவிக்க வேண்டும். போர்த்தர் தம் அரசாட்சிக் காலத்திலே சைவ சமயத்தவர்களுக்கு இழைத்த தீங்குகள் அனந்தம். கூலிக்கு ஆட்களை நியமித்து அவர்களைக் கொண்டு சைவ சமயத்தவர்களை அஞ்ஞானிகள் என்று பிரசாரம் பண்ணு வித்தார்கள். அவர்கள் சைவ மக்களைப் பார்த்து உங்கள் சுவாமி மூக்கிருந்தால் மணக்குமா, கண்ணிருந்தால் காணுமா, காதிருந்தால் கேட்குமா என்றெல்லாம் பிரசாரம் பண்ணுவித்தார்கள். அப்படிப் பிரசாரம் செய்யும் போதகன்மார் பட்டியலைச் சேர்ந்தவர் தான் சுவாமி ஞானப்பிரகாசர். அவர் கீரிமலை, மாவிட்டபுரம் என்னும் சொற்களின் வரலாற்றுப் பெயர்களை அறிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியிருக்காது. "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வழிபட்டார்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பிராபரமே" என்று தாயுமான சுவாமிகள் பாடின பாட்டின் உண்மை தத்துவம் அவர்க்குப் புரியாது. அல்லது சமயக் கடவுளின் அருள்புரி பரத்துவத்தைப் பற்றிப் புரிந்திருந்தால் அவர் மேற்படி சொற்களுக்கு அவ்வாறு பொருள் செய்து ஒவ்வொரு சைவ சமயத்தவன் உள்ளத்தையும் புண்படுத்த முற்பட்டார். நிற்க இவர் இவ்வாறு வைபவமா லைக் கூறறுகளுக்கு எதிர்க் கூற்றுகளைச் சொல்வாரானால் பொது மக்களுக்கு யார் கூற்றுச் சரி, யார் கூற்றுப் பிழை என்று பிரித்தறிய முடியாது. அவர்களுக்கு வைபவமாலை சொல்லும் உண்மை மனசு புகாது. மனதிற் பதியாது விட்டுவிடும். ஆகையால் சைவசயத்தவர் வைபமாலைக் கூற்றையே ஏற்று உண்மை வரலாற்றை உணர்வாராக. அன்றியும் கீரிமலை, நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் என்னும் பெயர்கள் அவ்வவ் வினை முற்றலைவர்களால் தொடர்புபட்டுக் காரணப் பெயர்களாக அழைக்கப்பட்டு வருதலை வைபவமாலையர் தங்கால எல்லைக்கு முற்கூட்டியே நிகழ்ந்துவரும் நிகழ்ச்சியென்றும் துணிந்து கொண்டமையாலே தான் தம் நூலில் அவ்வாறு குறிப்பிட்டார் என்றும் அப்பெயர்களுக்கு சொற் பொருள் விரிப்பது அதனை மறக்கும் ஆற்றல் கொண்டதல்ல என்றும், ஒருவர் உரைக்கும் இன்ன கருத்துக்கள் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு ஆய்வுப் பொருளிடைச் செல்லாதென்றும் அதுவும் தம் வாய் ஆதாரம் தானெனில் அது எள்ளப் படுந்தகையதென்றும் உணர்ந்து கொள்க. அக்காலத்திற்கு ஒருவர்க்காதாரம் மனுக் கிடைக்கா தென்க. எனவே வைபவமாலைக் கூற்றை மெய்யென நம்பிப் பயனடைவோமாக.

### 11. பெரியமனத்துள்ளார் விவாகம்

தில்லையிற் பெண் தில்லை எல்லை கடவாததால் பெரியமனத்துள்ளார் விவாகமில்லாதவராய் வந்திருந்தார்.அவர் சாம்பசிவ ஐயரின் மகன் வாலாம்பிகையை விவாகம் செய்து அப் பெண் ணுக்குத் தில்லைநாயகவல்லி என்று பெயரை மாற்றிக் கந்தசுவாமி கோயிற்றென்புறத்திலுள்ள அக்கிரகாரத்தில் வாசஞ்செய்து தன் பணிவிடையை நிறைவேற்றி வந்தார். பிராமணக் குடும்பங்கள் இரண்டும் ஒரு குடும்பமாகி இரு திறத்துக் கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைத் தலைவ ரானார். இது நிற்க.

(வை.மா.ப.22)

### 12. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பிற்கால வரலாறு

யாழ்.பாடி இறந்த பின் யாழ்ப்பாண நாடு ஸ்திரமான ஆட்சி இன்றி தளப்பமடைந்தது. பரந்து வாழ்ந்து குடிமக்கள் யாவரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலையே தஞ்சமென்று வாழ்ந்து வரலாயின. இலங்கையில் மிகப் பழமையானதும் , தமிழரசர் பரம்பரையால் தோற்றுவித்ததுமான மகிமையான தமிழ்க்குடியேற்றங்களை உருவாக்க ஏதுவானதுமான இம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 15 ஆம் நூற்றாண்டு வரை எதுவித குறைவுமின்றி வளர்ந்தது. கிறிஸ்தவர், பறங்கியர் கால அழிவுகளின் பின்னர் 17ஆம் நூற்றாண்டளவில் மீண்டும் புத்துயிர் பெற்றபோது பழமைபோலக் கோயில் நிர்மாணிக்கப்பெற்று மூர்த்திகள் பிரதிட்டை செய்யப்பெற்று, கொடியேற்றம் என்ற கிரியையுடன் கூடிய இருபத்தைந்து தினங்களுக்கான மஹோற்சவத்தை ஆரம்பித்தும் மாசி மகத் தீர்த்தம் ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஆகியவற்றை முறைப்படி ஆரம்பித்தும் அதன் மூலம் சைவமக்களை உயர்நிலைக்கு உயர்த்தி வளர்க்க வேண்டிய பிரயத்தனங்களையும் அவ்வக்கால ஆதீன கர்த்தாக்கள் இக்கோயிலை மையமாக வைத்துச் செய்து வந்தனர்.

ஈழத்திலே அரச பரம்பரையினரால் கட்டப்பட்டதும், ஆதரிக்கப்பட்டதும் சைவத்தமிழர்களது பெருக்கத்துக்கிடமானதுமான இவ்வாலயத்திற்தான். முதன் முதலாகத் துவசாரோகணமாகித் தொடர்ச்சியான 25 தினங்களுக்கு மஹோற்சவம் நடைபெற்றது. முதன்முதலாகச் சாஸ்திர விதிககமைய சிற்பத்தேர் செய்வித்து ஐந்து தேர்களோடிய ஸ்தலம் மாவிட்டபுரம் தான் .ஆடி அமா வாசை மாசிமகம் ஆகிய காலத் தீர்த்தங்களை ஆகம மரபு பிறழாது ஆரம்பித்து வைத்த பெருமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைத்தான் சாரும். கலைஞர்களுக்கு அவர்தம் துறையில் ஊக்குவிக்கும் நோக்கமாகப் பரிசுகளும் விருதுகளும் பட்டங்களும் கொடுக்கும் வழக்கத்தை இவ்வாலயந்தான் ஈழத்தில் ஆரம்பித்திருந்தது.

கதாப்பிரசங்கம், பூஞ்சப்பறம் பூமாலைகளால் சாத்துப்படி அலங்காரம் இலட்சதீபம் ஆதியாந்துறைகளை முதன் முதலாகப் புகுத்தியதும் இவ்வாயத்தான். மூன்று திருவீதிகளையும் நந்தவனவாசலில் தலவிருட்சமான களஞ்சிமான விருட்சத்தையும் இவ்வாலயங்கொண்டிருக் கிறது. ஈழத்தில் முதன் முதலாக இராஜகோபுரம் அமைத்த பெருமை மாவிட்டபுரத்தையே சாரும். இன்னும் இக்கோபுரமே இலங்கையில் அதியுயரத்தைக் கொண்டுள்ளது. ஈழத்தில் எங்குமே காணப்பெறாத முற்றும் வெள்ளியாற் செய்த அழகுமிகு கொடித்தம்பம் இங்கே தான் உண்டு. இங்கு இடம்பெறும் பூசைகள், உற்சவாதிகள், கர்மானுஷ்டானங்கள் இன்றும் எவ்வித திருத்தம் இடைச் செருகல் இல்லாது முன்னோர்கள் வகுத்தவழி மூலம் இடம்பெற்று வருகின்றன.

ஈடிணையற்ற திருவருட்செல்வங்களைத் தன்பால் ஈர்த்து வைத்து மழை நீர் போல் யாவருக்கும் பயன்தரக்கூடியதான மகிமைகளைக் கொண்ட இத் திவ்விய தலத்திற்கு ஈழநாடு மட்டுமல்ல உலக மக்களே இவ்வாலய திவ்விய தரிசனத்துக்கு வந்து போவதோடு அதன் வர லாற்றுச் சிறப்பினை ஆராயவும் முற்படுகின்றனர். இன்று மாவிட்டபுரஆலயம் கருங்கற் திருப்பணிகளாலும் அழகுமிகு மண்டபங்களாலும் சிச்திரவாகனங்களாலும் உயர்ந்து வளரு கின்றது. நித்திய, நைமித்தியங்கள் யாவும் பழமையான மரபைப் பின்பாற்றி எதுவித தவறு மில்லாது சிதம்பரம் தில்லைமுவாயிரர் தீட்சிதர் தில்லைவாழ் அந்தணர் பரம்பரையினர் நடத்தி வருகின்றனர். இங்கே நடைபெறும் உற்சவங்களுள் ஆனி,ஆடி மாத மஹோற்சவங்கள் ஐப்பசி ஸ்கந்தசட்டி, தைமாத இலட்சார்ச்சனை ஆகியவை மிக மிகத் தெய்வீகமானவை. இதை விட விஜயதசமியன்று மாவைமுருகப் பெருமான்,தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு எழுந்தருளி வியாக்கிராசுரவதம் செய்வது ஒரு சிறந்த உற்சவம். மிக உயர்ந்த இராச கோபுரத்தைக் கொண்டு சீரும் சிறப்புமாய் வளர்ந்துவரும் மாவிட்டபுரஸ்தலம் இன்று சகல துறைகளிலும் பிரகாசித்து வருவதை காணப்பெறலாம். இம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலாதீனத்தை முன்நின்று நடாத்தும் இன்றைய ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து ஷண்முகநாதக்குருக்களாவர். இவர் தீட்சிதர் பெரியமனத்துள்ளார். வழித்தோன்றலாகவும் தீட்சிதர் சபாபதி ஐயர் அவர்களது பரம்பரையின் ஏழாவது வாரிசுவாகவும் விளங்குகிறார். யாவரிடத்தும் அன்பும் பாசமும் கொண்டு தன்னலமற்ற சேவைகளைச் செய்து மாவை முருகப் பெருமானது "அடிமை" என்ற சீரிய தொண்டனாக இவர் வாழ்வதை யாவருமறிவர். வேதாகம அறிவும் சைவசய நூல்களின் அறிவும் தமிழறிவும் ஒருங்கே பெற்றவர். தாய்நாட்டபிமானம் உடையவர். யார்வர்க்கும் மாவை முருகன் திருவருள் பாலிப்பாராக.

(தொடரும்)

## சமாதானத்தை வலியுறுத்தி வவு.இல் தெருவெளி நாடகம்





(வவுனியா)

"தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஐக்கியப்பட்டு ஒன்றுபட்ட சக்தியாகத் திரண்டு நின்று ஒருமித்து உரிமைக்காக குரல் கொடுப்போம்'' என்ற தொனி யில் வவுனியா அரங்காலயா பண்பாட்டுக்குழுவினர் தமது ''விடியலின் வம்பங்கள்'' என்ற தெருவெளி நாடகம் மூலமாக தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள் ளனர்.

வவுனியாவில் பல கிராமங் களுக்குச் செல்லும் இக் குழு வினர் அப்பகுதி மக்கள் மத்தி யில் சமாதானத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

தமது நாடகம் மூலமாக மிகத் தெளிவாகத் தமது கருத்துக் களை மக்கள் மத்தியில் வெளிப் படுத்தி, பின்னர் அந்த மக்களிட மிருந்து கருத்துக்களையும் இக் குழுவினர் கேட்டறிந்து கொள்கின்றனர்.

பெரும்பான்மை சிங்கள இனத் தவர்கள் எவ்வாறு சாதாரண மக் களையும் சிறுபான்மை மக் களையும் பிரிக்கின்றார்கள் என்றும், அந்த மக்களிடை யேயுள்ள சில பிரச்சினைக ளையும் பெரிதாக்கி அவர்கள் மத்தியில் எவ்வாறு பிரச்சினை களை உண்டு பண்ணுகிறார் கள் என்பதையும் மேலாதிக்க அரசியல்வாதிகள் எவ்வாறு மதங் களுககிடையில் பிளவை ஏற்படுத் துகிறார்கள் என்பதையும் சுருக் கமாக அரைமணி நேரத்தினுள் இந்நாடகம் மூலம் கலைஞர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

இந்தத் தெருவெளி நாடகம் மூலம் மக்கள் மத்தியில் விழிப் புணர்வையும் ஒற்றுமையை யும ஏற்படுத்துவதே தமது நோக் கமாக இருப்பதாக ஏற்பாட்டாளர் கள தெரிவிக்கின்றார்கள். (ரு-4)

## கோதுமை மா மூட்டைகள் கொழும்புக்குக் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு சட்டவிரோதமான முறையில எடுத்துச் செல்லப்பட்ட 11 ஆயிரத்து 500 கிலோ கோதுமைமா புறக்கோட்டையில் நுகாவோா பாதுகாப்பு சபை அதிகாாகளினால நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவினால் நிவார ணமாக வழங்கப்பட்ட கோதுமை மாவை கிழக்கில் விநியோகம் செய்யாது, சிங்களப் பகுதிகளில் விநியோகிக்கவோ அல்லது விற் பனை செய்யும் நோக்கத்துடனேயோ இரண்டு லொறிகளில் மட்டக்களப்பி லிருந்து இக் கோதுமை மா எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடாபாக நுகாவோா பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலொன்றின் பேரில் பொலிஸா ரின் உதவியுடன் குறிப்பிட்ட இடம் முற்றுகையிடப்பட்டது.

இநதச்சம்பவம் தொடாபாக 6 போ பொலிஸாாினால் கைது செய் யப்பட்டுள்ளனர்.' இரு லொறிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

(ரு-4)



நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் "மார்கழி தீஞ்சொட்டு", "Palmerah poem Anthology" ஆகிய இரு கவிதை நூல்கள் வெளியீட்டு விழா இடம்பெற்றது. நூல் ஆசிரியர் கதிர வேற்பிள்ளை அருந்தவராசா நூல்களை வெளியிட இலங்கை மின்சாரசபை உயர் அதிகாரி வேலுப்பிள்ளை பெறுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- சிவசங்கர்)

# தென்னிலங்கையில் தோன்றியுள்ள அரசியல் தலைமைத்துவ இடைவெளி

**மட்டக்களப்பு ஈழநாதத்திற்காக அதியமான் எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகின்றது**

தென்னிலங்கையின் அரசியலில் அண்மைக்காலமாக அடிக்கடி இடம்பெற்று வரும் குழப்பகரமான சம்பவங்கள் இன்று



அனைவரது கவனத்தையும் அதிகம் ஈர்த்துள்ளது.

கடந்த ஆண்டு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பறித்தெடுத்துக் கொண்டது முதல், பின்னர் இடம்பெற்ற ஆட்சி மாற்றம், நாடாளுமன்றக் குழறுபடிகள் என்று, தென்னிலங்கையின் அரசியல் முன்னெப்போதையும்விட இப்போது அதிகம் குழப்பங்கள் நிறைந்த ஒன்றாக மாறியிருக்கிறது.

## குழப்பத்திற்குக் காரணம்?

தெனனிலங்கை அரசியலில் இவ்வாறு அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் இந்தக் குழப்பகரமான நிலைக்கு உண்மையான காரணம் என்ன? இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலான ஆட்சியதிகாரப் போட்டி காரணமாகவே இவையெல்லாம் நடந்தேறு



கின்றன என்பது நேரடியாகப் புலப்படும் ஒரு உண்மை.

ஆனால், ஆட்சி அதிகாரப் போட்டி யென பது சுதந்திர(?) இலங்கையின் காலத்திலிருநதே காணப்பட்டுவரும் ஒன்று. இப்போது புதிதாக இந்தளவுக்கு நிலைமை மாறக காரணம் என்ன? தென்னிலங்கை அரசியலில் தோன்றியிருக்கின்ற பாரிய தலைமைத்துவ இடைவெளியே இதற்குப் பிரதான காரணமெனலாம்.

போட்டிக்குச் செயற்பட்டுவந்த இரண்டு பிரதான தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகளிடமும், அதன் அரசியலை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்குப் பொருத்தமான சரியான தலைமைத்துவம் காணப்படாததே, இருக்கின்ற தலைமைகளை வைத்துக் கொண்டு இப்படி மாரடிக்கவேண்டிய நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது எனலாம்.

இன்னொருவகையில் பார்த்தால், தமது அரசியலை தமிழர்களுடைய தலைகளின் மீது நடாத்தும் கைங்கரியத்தை இந்த இரண்டு பிரதான கட்சிகளும் காலங்காலமாக முன்னெடுத்துவந்ததன் விளைவு தான் இது வென்றும் கூறலாம்.

தமிழர்களுடைய உரிமைகளை நசுக்கி, அதன்மீது தமது அரசியலை நடாத்த முனைந்த இவர்களின் செயற்பாடுகளினால, இனறு இந்த இரண்டு கட்சிகளுமே தமது முக்கியமான தலைவர்கள் பலரை இழந்து நிற்கிறது. இதுமட்டுமன்றி, தமிழர்களுடைய தலைகளின்மீது அரசியல் நடாத்துவதென்பது இனிமேல் சாத்தியமில்லை என்கின்ற ஒரு நிலை தற்போது தோன்றியிருப்பதும், இவர்களால் அடுத்த கட்டத்துக்குத் தமது அரசியலை நகர்த்தமுடியாமல் இருப்பதற்குக் காரணமாகவிருக்கிறது.

ஜே.வி.பி. இப்போது அதனைச் செய்து பார்க்க முயல்கின்றபோதிலும், இதன் விளைவு எப்படி இருக்கப்போகிறது என்பதை அவர்கள் இனிமேல்தான் அறுவடை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது.

## தென்னிலங்கை அரசியல்

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லப்படுகின்ற 1948ஆம் ஆண்டு தொடக்கம், 2000 ஆம் ஆண்டுக் காலப்பகுதி வரையிலான தென்னிலங்கை அரசியல்வாதிகளின் அரசியல் வரலாற்றை எடுத்துநோக்கினால், அது காலத்துக்குக் காலம் சிங்களத் தலைமைகள் தமிழர்களின் தலைகளின் மீது நடாத்திய அரசியலின் மூலமே நகர்த்திச் செல்லப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகப் புலப்படும். சிங்களம் மட்டும் சட்டம், பௌத்தம் இலங்கையின் ஆட்சிமயமாக்கப்படல், தரப்படுத்தல் சட்டம், அவசரகாலத் தடைச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று அறைகூவல் விடுத்து தமிழர்கள்மீது வெளிப்படையாகத் தொடுத்து விடப்பட்ட போர், "சமாதானத்துக்கான போர்" என்ற பெயரில் நடாத்தப்பட்ட போர், சமாதான முயற்சிகள் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டுவரும் அரசியல் என்கின்ற ஒவ்வொருவிதமான, தமிழர்கள் மீதான, அல்லது தமிழர்கள் தொடர்பான பிரதான அரசியல் செயற்பாடுகள் மூலமே, தென்னி லங்கை அரசியலாளர்களால் தம்முடைய அரசியலை இவ்வளவு காலமும் நடாத்த முடிந்தது.

கடந்த இரண்டு தசாப்த காலத்துக்குள் நடாத்தப்பட்ட சிங்களத்தின் அரசியலை மட்டும் நோக்கினால், தமிழர்களுக்கு எதிராக வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தப் பட்ட போர், தமிழ் மக்களை மீட்கப்போவதாக அறைகூவல் விடுத்து, "சமாதானத்துக்கான போர்" என்ற போர்வையில் தொடுக்கப்பட்ட போர், தமிழர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் போவதாக அறிவித்து நடாத்தபபட்ட சர்வதேச அரசியல் இராஜதந்திரப் போர் ஆகியனவே தென்னிலங்கை அரசியலின் உந்துசக்திகளாக இருந்துவந்துள்ளன. இவற்றுள் முதலிரண்டிலும் அவர்கள் சந்தித்த தோல்விகள் காரணமாக அவர்கள் மூன்றாவது வழிமுறையைத் தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். தமிழர் தரப்புடன் போர்நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்து, அவர்களுடன் ஒப்புக்கேனும் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டியது தவிர்க்கமுடியாத நிலை சிங்களத் தலைமைகளுக்கு ஏற்பட்டிருந்தது.

அந்த அரசியலே இப்போது தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளினதும் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் பிரதான விடயமாகவும் மாறியிருக்கிறது.ஆனால், இ[illegible] கொண்டு நடாத்துவ[illegible]ம் இவர்களுக்குள் பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருக்கிறது.

## புரிந்துணர்வு உடன்படிக்கை

தமிழர்களுடைய தலைகளின் மீது குண்டுகளைப் போட்டு, அதன்மூலமே தமது அரசியலை நடாத்திப் பழகிப்போன இவர்களது வழமைக்கு, போர்நிறுத்த புரிந்துணர்வு நடைமுறை ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாகவே, இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும், தம்முடைய அரசியல் முரண்பாடுகளையும் முதன்மைப் படுத்தி, இன்று இந்த அரசியலிலும் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால், இவ்வாறே இந்த அரசியலை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தாலும், தென்னிலங்கையில் இந்தக் கட்சிகளிடையே தோன்றியிருக்கின்ற பாரிய அரசியல-தலைமைத்துவ இடைவெளி காரணமாக அவர்களினால் அதனைத் தெளிவாக முன்னெடுத்துச் செல்லமுடியாமல் இருக்கிறது. 2001ஆம் ஆண்டு இந்த சமாதானத்தின் பெயரிலான அரசியலை தெளிவாக ஆரம்பித்து வைத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதனை உறுதியாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. இது அவருடைய தலைமைத்துவக் கோளாறினாலேயே ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் பலரும் குறிப்பிடுகின்றனர்.

சமாதானத்தின் பேரால் கிடைத்த தெளிவான மக்களாணையைப் பெற்று, பிரதமராக நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை எதிர்கொள்வதற்கு வகுத்த திட்டங்கள் அவருடைய பலவீனத்தையே புலப்படுத்தியதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தனக்குக் கிடைத்த மக்களாணையைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளும் அரசியல் தலைமைத்துவ நுட்பம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்பது அவர்களுடைய வாதம்.

## தலைமைத்துவ வெற்றிடம்

ரணிலனுடைய எதிர்த்தரப்பான ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது தலைமையிலான சுதந்திரக் கட்சியும், ரணிலினுடைய இந்தப் பலவீனத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஜே.வி.பி.யையும் இணைத்துக்கொண்டு நாடாளுமன்ற அரசியலைக் கைப்பற்றியுள்ள ஜனாதிபதி சந்திரிகா, ஏதோவொரு வகையில் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கான வேலைத்திட்டங்களை இப்போது முடுக்கிவிட்டுள்ளார்.

ஆனால்; அவருடைய கட்சிக்குள்ளும் இப்போது இந்தத் தலைமைத்துவ வெற்றிடம் இப்போது ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.தமக்கென ஒரு தனியான வேலைத்திட்டத்தை வைத்துக் கொண்டு ஆட்சியதிகாரத்தில் நீடிக்கும் நோக்குடன் ஜனாதிபதி அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வந்தாலும், அவருடைய கட்சியும் நாடாளுமன்றத்தில் பலவீனமான நிலையிலேயே இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் முழுமையாக தமது பலத்தை நிரூபிக்கக் கூடியளவுக்கு அவருடைய கடசியில் போதிய தலைவர்கள் இல்லை. இதனால், நாடாளுமன்றப் பெரும்பான்மைக்காக அவர் ஜே.வி.பி.க்கும், ஏனைய கட்சி களிலிருநது தாவிவரத் தயாராக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வளைந்து கொடுத்துச் செயற்பட வேண்டியவராகிறார். இதனால், அவரும் உறுதியான அரசியல் முடிவு




களை எடுக்கமுடியாதவராக தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

## ஜனாதிபதித்தேர்தல்

இதனிடையே, ஜனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட வேலைத் திட்டத்துக்கு அப்பால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பான வேட்பாளர் யார்? என்கின்ற பிரச்சினையும் அவர்களுக்குள் பெரியளவில் உருவெடுத்திருக்கிறது.

தற்போதைய பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவும், ஜனாதிபதியின் சகோதரரும், அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவும் இந்தப்



பதவிககாக தம்மிடையே கடுமையாகப் போட்டியிட்டு வருகின்றனர்.

ஆனால்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி பீடமேறுவதற்குப் பக்கபலமாக இருந்த ஜே.வி.பி., தனித்து ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்கத் தீர்மானித்துவருவதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதிக் கனவும் கேள்விக் குறியாகவே உள்ளது.

## ரணிலின் பலம்

இநத ஒப்பீட்டுக்குள் ஓரளவுக்கு பலமானவராக தெரியும் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரம சிங்க, அவருடைய கட்சிக்கு வெளியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுவரும் நெருக்கடிகளினால் பெருமளவு பலவீனமடைந்து வருகிறார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, முடிவுகளை எடுபபதில் தாமதப் போக்கைக் காட்டும் இவருடைய பலவீனமான நிலையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியை நிர்மூலமாக்கும் பணிகளை ஆளும்



தரபபுத் தீவிரப்படுத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைத்துக் கொண்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இப்போது அரசுடன் இணைந்து கொண்டுவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல துண்டுகளாக உடைக்கப்பட்டு, அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுடன் இணைந்து கொண்டுவிட்டனர். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே அரசுடன் இணைந்துகொள்ளுமளவுக்கு (றோகித போகல்லாகம) ஐக்கிய தேசியக் கட்சி பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தாவி, அக்கட்சியின தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்த, ஓரளவு மக்கள் பலமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவை சிறைக்குள் தள்ளியிருப்பதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் நிலைகுலையச செய்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதித் துரும்பாகவிருக்கும் சபாநாயகர் டபிளயு. ஜே.எம். லொக்குபண்டாரவையும் அந்தப பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆளும் தரப்பு தவிரமாக முயன்று வருகிறது. நிலைமை இப்படியே போனால், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஆக மொத்தம், சரியான தலைவர்கள் இல்லாத நிலையிலும், தமிழர்களுடைய தலைகளின்மீது அரசியல் நடாத்த முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதனாலும், தென்னிலங்கை அரசியலாளர்கள் தமக்குள் மோதி மென்மேலும் பலவீனப்படும் நிலையே எதிர் காலததில் தொடரப் போகிறது என்பதையே தற்போதைய நிலைமை சுட்டுகிறது.

அரசுடன் சமபல நிலையிலிருந்து சமாதானப் பேச்சு வார்த்தை நடாத்தும் தகுதியிலிருக்கும தமிழர் தரப்பு, தென்னிலங்கை அரசியலாளர்களை தெளிவான தீர்வை முன்வைக்க வேண்டும் என்று உறுதியுடன் கோரிநிற்கும் காலகட்டத்தில், தென்னிலங்கை அரசியலாளர்கள் அவ்வாறு செய்யமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதே இப்போதைய யதார்த்தம். ★

# சிறுவர் அரங்கம்

## பல்கலைக்கழகம் உருவானது எப்படி?

பழைய நூல் ஒன்றில் இருந்து எடுக்கப்பட்ட இப் படம் மத்தியகால ஐரோப்பிய பல்கலைக்கழகம் ஒன்றில் ஒரு பேராசிரியர் தமது மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதைச் சித்திரிக்கிறது.

ஆரம்ப காலத்தில் பல் கலைக்கழகங்களுக்கென கட்டடங்கள் இருக்கவில்லை. மாணவர்கள் தமது ஆசிரியர்களின் வீடுகளுக்கே பாடம் கேட்கச் சென்றனர். பின்னர் நகரின் பகுதியொன்றில் மாணவர்கள் ஒன்றாகத் தங்கியிருந்து உயர்கல்வியைத் தொடர்ந்தனர். இவ்வாறு மாணவர்களின் கல்வி நடவடிக்கை குறிப்பிட்ட இடமொன்றில் நடைபெறத் தொடங்கியதை அடுத்து அவர்களைச் சுற்றி கற்றல் வசதிக்கான கட்டடங்கள் எழுந்தன. அவையே பின்னர் பல் கலைக்கழகங்கள் ஆயின.



## எங்கள் மொழி

எங்கள் மொழி நல்ல மொழி  
இனிமையாகப் பேசும் மொழி

அன்னை சொல்லித்தந்த மொழி  
அன்பொழுகப் பேசும் மொழி

பள்ளி சென்று கற்ற மொழி  
பக்குவமாகப் பேசும் மொழி  
நண்பர் கூடிப் பழகும் மொழி  
நயமுடனே பேசும் மொழி

நாள் தோறும் உதவும் மொழி  
நல்ல தமிழ் எங்கள் மொழி

குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா.




## உங்களுக்குத் தெரியுமா?

* பச்சோந்திகளுக்கு கண்கள் இரண்டும் இரு வேறு திசையில் தனித்தனியாகப் பார்க்கும்படி செயற்படுகிறது.


* எடை. அளவு ஆகியவற்றை வைத்துக் கணக்கிட்டால் மனிதர்களைவிடப் பறவைகளே மிக பலசாலிகள்.

* அமெரிக்காவில் பன்றிகளை 'பிக்(Pig)' என்பார்கள். 80கிலோவுக்கு மேல் வளர்ந்துவிட்டால் அதை ஹாக் (hog) என்பார்கள்.

* மனிதன் மட்டுமே முதுகை தரையில் வைத்து மல்லாந்து தூங்கும் தன்மை உடையவன்.

## முயன்று பாருங்கள்

படத்தில் உள்ள 4 பன்றி பொம்மைகளை, இங்கு காணப்படும் மூன்று பெட்டிகளிலும் சம அளவில் வைக்க வேண்டும்? உங்களால் முடிகிறதா? முயன்று பாருங்கள்.



## விடுகதைகள்

1.ஆயிரம் பேர் அணிவகுத்துப் போனாலும் வந்த சுவடு தெரியாது அது என்ன?

2.ஆடி ஆடி அசைந்து வரும் ஆத்திரம் வந்தால் பொங்கி வரும் எது என்ன?

3.ஆளில்லாத வீட்டில் கண்ணில் பாடுவான் அவன் யார்?

4.ஆயிரம் நூல் பின்னலில் சுவையான பலகாரம் அது என்ன?

5.ஆளில்லாத வீட்டிலும் அழகான தோரணம் கட்டுவான் அவன் யார்?

6.ஆண்டுக்காண்டு அழகழகாய் உருமாறி வரும் அது என்ன?

7.ஆள் ஏறும் குதிரைக்கு அங்கமெல்லாம் கண். அது என்ன?

## ஒரு சிற்பியின் கதை

சாமுத்திரிகன் என்ற மன்னன் இருந்தான். அவன் அழகான கலைக்கூடம் ஒன்று கட்ட ஆசைப்பட்டான். அதில் விதவிதமான சிலைகள் வைக்க நினைத்து ஒரு திறமையான சிற்பியிடம் ஒரு சிலை அமைக்கும் பணியை ஒப்படைத்திருந்தான்.

சிற்பி அற்புதமாகச் சிலைகள் செய்தான். அவற்றின் அழகைக்காண கண்கள் கோடி வேண்டும். அரசர் சிற்பிக்கு ஏராளமாகப் பரிசளித்தார். அதேசமயம் இன்னொரு அழகிய சிலையை இந்தச் சிற்பி அமைக்கக்கூடாதென்றும் நினைத்தார். தன் பெருமையே உலகில் நிலைக்க வேண்டுமென்று பேராசை கொண்டார்.

"நான் உனக்கு நிறைய வெகுமதி கொடுத்தேன். நான் ஒரு பரிசு கேட்டால் நீ தருவாயா?" என்று கேட்டார் மன்னர்.

"என்னால் கொடுக்கக்கூடியதானால் நான் சிறிதளவும் தயங்க மாட்டேன்" என்றான் குணசாலியான சிற்பி.

"உன் கட்டை விரல் வேண்டும்!" என்றார் மன்னர். சிறிதும் தாமதியாமல் ஏகலைவனைப் போல் வெட்டிக் கொடுத்தான் சிற்பி.

அடுத்து இன்னொரு சிலை அமைக்கும் பணியை ஒப்புக் கொண்டிருந்தான் சிற்பி.

"எப்படிச் செய்யப்போகிறீர்கள்?" என்று கவலைப்பட்டாள் மனைவி.

"இறைவன் நமக்குத் துணை இருக்கும்போது மனதில் உறுதியும் இருக்கும்போது ஏன் குழம்புகிறாய்?" என்று சமாதானம் சொன்ன சிற்பி, அரசன் சொன்னபடியே அற்புதமாகச் செய்து கொடுத்தான். கும்பாபிஷேகத்தின்போது பரிசுகள் கொடுத்து கௌரவித்தான் அரசன். இனி! இவன் இது போல் சிறப்பாக வேறு ஒரு சிலை செய்யக்கூடாது என்ற அசூசையில் சிற்பியின் கண்களைக் குருடாக்க உத்தரவிட்டார் அரசன்?

"இது நியாயம் தானா?" என்று கதறினாள் சிற்பியின் மனைவி.



தான் நம்பியிருந்த இறைவனிடம் கதறி அழுதான் சிற்பி.

சிறிதுநாட்களில் ஏதோ ஒரு கண்நோய் வந்து பார்வையிழந்தான் மன்னன். சிற்பியின் கனவில் வந்த இறைவன், தன்னுடைய சிலையைச் செய்யும்படிக் கூறினார். வேதனையுடன் தன் மனைவியின் கையை வைத்து தான் வணங்கும் இறைவனின் சிலையை செய்ய ஆரம்பித்தான் சிற்பி.

ஒருநாள் சிற்பியின் மனைவி சிலையைத் தொட்டுக்கொண்டிருக்க அவள் விரலின் மேல் தன் கையை வைத்து வழக்கம்போல் சிற்பி உளியால் அடிக்க, உளி சிலையில் படுவதற்குப் பதிலாக மனைவியின் கையைச் சிதைக்க அவள்,

"இறைவா.." என்று அலறினாள் இரத்தம் பீறிட்டு சிற்பியின் மூளியான கட்டைவிரலிலும் கண்களிலும் தெளிக்க பளீரென்று பார்வை வந்தது. சிற்பிக்கு! கட்டைவிரலும் முழுமையாயிற்று.

சிற்பியும், அவன் மனைவியும் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! இறைவனைப் பாமாலைகளால் போற்றிப் புகழ்ந்தனர்.

உண்மையுள்ள நல்லவர்களை இறைவன் எப்போதும் கைவிடுவதில்லை.

## பொது அறிவு

1.நெல்லை பிரதானமாக உற்பத்திசெய்யும் நாடு எது?

02. உலகில் சிறிய நாடு எது?

03. எவரஸ்ட் சிகரத்தின் உயரம் என்ன?

04. இலங்கையின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

05. உலகில் முதலாவது வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

06. ஒலியின் வேகம் என்ன?

07. யாப்பு இல்லாத நாடு எது?

08. புவியிலிருந்து சந்திரனுக்கு காணப்படும் தூரம் எவ்வளவு?

09. இலங்கையில் துறைமுகசபை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

10. இலங்கை போக்குவரத்துசபை நிறுவப்பட்ட ஆண்டு?

சி.சியாமளா.

## விடைகள்

விடுகதைகள்

1.எறும்பு 2.கடலலை 3.பூட்டு  
4.இடியப்பம் 5.சிலந்தி 6.கலண்டர்  
7.கயிற்றுக்கட்டில்

முயன்று பாருங்கள்


இரண்டு சின்னப் பெட்டிகளில் தலா 2 பன்றி பொம்மைகளை வைக்கிறீர்கள். இப்போது சின்னப் பெட்டியை எடுத்து பெரிய பெட்டிக்குள் அடக்கிவிடுகிறீர்கள். பெட்டிக்கு இரண்டு பொம்மைகள் சரியாகிவிட்டதே.

பொது அறிவு

1.சீனா 2.வத்திக்கான் 3.8848km 4.1978ஆம் ஆண்டு  
5.1959ஆம் ஆண்டு 6.ஒரு வினாடிக்கு 33000 செ.மீ 7.பிரான்ஸ்  
8.3,84400km 9.1979ஆம் ஆண்டு 10. 1958 ஆம் ஆண்டு

ரமணன் ஓர் கட்டைப் பிரமச்சாரி. பொறுப்புக்கள் எதுவுமற்றவன். ஓர் அரச ஊழியன். கண்ணியமானவன். ஏற்கனவே தான் உயிருக்கு உயிராக நேசித்த மஞ்சுளாவால் ஏமாற்றப்பட்டு வாழ்க்கையில் விருப்பு வெறுப்பு அற்று இருந்தவன். அருமையாகப் பாடுவான். இவனது பாடலையும் பாடும் பொழுது இவன் காட்டும் பாவத்தையும் ரசிப்பதற்கென்றே இவனது வாலிப காலத்தில் சில ஆண்களும் பெண்களும் நண்பர்களாயிருந்தனர்.

# தப்புக் கணக்கு



இப்பொழுது இவனுக்கு வயது நாற்பத்தியிரண்டு. நல்ல ரசிகன். நாமுந்தான் எல்லோரும் தேனீர் அருந்துகிறோம். எம்மில் ஒருவராவது ஒரு கோப்பை தேனீரில் எத்தனை மிடறு (உறிஞ்சல்கள்) இருக்கின்றது என்று ரசித்து ருசித்துக் குடித்திருக்கிறோமா? இவன் அப்படிப்பட்டவனல்ல. குடிக்கும் ஒவ்வொரு மிடறையும் சுவைத்து ரசிப்பான். "இன்று பதினெட்டு மிடறு அச்சா ரீ குடிச்சேன் மச்சான்" என்று நண்பர்களுடன் பீற்றிக் கொள்வான்.

ராதை அழகானவள். படித்தவள். பண்பானவள். பழக இனியவள். உள்ளத்து உணர்வுகளை இலேசில் எவரிடமும் சொல்லமாட்டாள். உஷா இவளின் உற்ற நண்பி. இவளிடங்கூட தன் வாழ்க்கைச் சுமைகள் பலவற்றை

## சிறுகதை

மறைத்தே பழகிவருகிறாள். கொடுமைக்காரக் கணவன் இவளது மென்மையான பெண்மைக்கு ஈடுகொடுக்காத முரட்டுக்காளை. மூன்று ஆண்டுகள் பல்லைக் கடித்துக்கொண்டு வாழ்க்கை ஓடத்தை ஒருவாறு ஓட்டிவிட்டாள்.

தன்னைப் புரியாத, தன் எதிர்பார்ப்புகளைத் தவிடு பொடியாக்குகின்ற இம்மிருகத்துடன் ஒட்டி வாழ்வதிலும் பார்க்க வெட்டி வாழ்வது உசிதமானது என நினைத்து தன் தாயுடனும் தன் ஒரேயொரு செல்ல மகன் வாசுவுடனும் தனியாக வாழ்க்கை நடாத்துகின்றாள்.

வெளிநாட்டிலிருக்கும் தன் சகோதரரது உதவியும், ஏற்கனவே இவர்களது வங்கி வைப்புக்களும் எதுவித பணக்கஷ்டமுமின்றி அவள் செல்வச் சீமாட்டியாக வாழ்க்கை நடாத்தப் போதுமானதாக இருந்ததுடன் இவள் தன் கணவனை ஒதுக்கி வாழ உந்துதலாகவும் துணிவாகவும் இருந்தது.

ராதை கணவனைப் பிரிந்து பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன.

ராதையின் வீட்டுக்கருகில்தான் ரமணனின் வீடும். தன் அலுவலகம் முடிந்தால் சிலவேளைகளில் ராதையின் குழந்தை வாசுவுடன் பொழுதுபோக்க வருவான். ராதையும் தனக்கேயுரித்தான தன் கட்டுப்பெட்டித்தனத்துடன் பழகி வந்தாள். எதிலும் பிடிப்பற்றிருந்த ரமணனுக்கு ராதையின் அடக்கமும், அமைதியும் குறிப்பாக இவளக்கேயுரித்தான ஆண் சுருதி கலந்த சுருதியுடன் கதைக்கும் பாங்கும் இவள் மீது ஒரு சலனத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

வாசுவுடன் பழகும் சாட்டில் அவள் அழகை ரசிக்கத் தொடங்கினான். இவனுடன் அவள் தேவையற்றுக் கதைப்பதேயில்லை. ஆனால் இவனோ, ஏதோ ஒரு வகையில் அவளைத் தன்னுடன் சில வார்த்தைகள் தானும் கதைக்க வைத்துவிடுவான்.

அன்று மாலைவேளை, வாசு எங்கோ விளையாடப் போய்விட்டான். ராதை ஹோலில் இருந்த நீள பின்னல் கதிரையின் கைப்பிடிச்சட்டத்தில் தலையணையை வைத்துப் படுத்தபடி வேதனையால் முனகியவண்ணம் மயங்கி கிடக்கிறாள். ரமணன் வருகிறான்.

இவளின் பரிதாபநிலையைப் பார்த்ததும்,

"மணி அன்ரி, மணி அன்ரி என ராதையின் தாயாரை அழைக்கிறான். எவருமில்லை.

"ராதை... ராதை.. ரா...தை" என்று தன்னை மறந்து கத்தியே விடுகிறான். ராதை குரல்கேட்டு இலேசாக கண்விழித்தவள் தன் இயலாமையால் மீண்டும் கண்களை மூடிவிடுகிறாள். அவளின் நிலை கண்டு பதறிய ரமணன் ஆபத்துக்குப் பாவமில்லை என்று அம் மதிமுகத்தின் நெற்றியைத் தொடுகிறான். துடித்தான். 'அப்பப்பா... எத்தகைய காய்ச்சலிது. அனலாகக் கொதிக்கிறதே' ஓடிப்போய் ஓட்டோ ஒன்றைப் பிடித்துவருகிறான். அதற்கிடையில் எங்கோ அயல் வீடு சென்ற ராதையின் தாயாரும் வந்துவிடுகிறாள்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ராதையைச் சூழ்ந்து டாக்டர் குழாம். நிப் ஏறியவண்ணமிருக்கிறது.

'நல்லகாலம் சிறிது தாமதித்திருந்தாற்கூட நோயாளியைப் பார்த்திருக்கமாட்டீர்கள்' என்று ஒரு டாக்டர் சொன்னார். இரண்டு நாட்கள் வார்ட்டில் தங்கி சிகிச்சை பெற்றபின் வீட்டிற்கு வந்துவிட்டாள் ராதை. இந்நிகழ்விற்குப் பின் ராதையின் உள்ளத்தில். ரமணன் ஓர் உயர்ந்த இடத்தில் இருந்தான்.

அவளுக்கேயுரித்தான கனிவான வரவேற்பைக் கொடுத்து வாசுவிடம் தேனீரைக் கொடுத்து ரமணன் மாமாவுக்குக் கொடுக்கும்படி கூறுவாள்.

அன்றொருநாள் ராதை எண்ணெய் தேய்த்து முழுகியபின் 'வண்ணக்கூந்தலை அள்ளிமுடித்து பூ வைத்துப் பொட்டிட்டு ஓர் புதிய கத்தரிப்பூ நிறப் பற்றிக் சட்டையில் அழகுப் பதுமையாக நிற்கிறாள். இவன் வழமை போல வருகிறான். பார்த்தான் அவள் கோலத்தைப் பார்வையால் அவ்வழகைப் பருகிய வண்ணம்.

"ராதை உம்முடன் ஒரு விடயங் கதைக்கவேண்டும். கொஞ்சநேரம் இப்படி இருக்கிறீரா?" என்று கேட்க அவளும் அருகில் இருந்த கதிரையில் அமர்கிறாள்.

"ராதை! நான் சொல்வதைக் கவனமாகக் கேளும். உமது நடையுடை பாவனைகள், பழகும் பண்பு இக்காலத்திலும் இப்படி ஓர் பெண்ணா? என என்னைச் சிந்திக்கத் தூண்டுகிறது. அத்துடன் இவை உம்மீது எனக்கு ஓர் அலாதியான பற்றையும் ஏற்படுத்தியுள்ளது. நானும் வாழ்க்கையிற் பற்றற்றே இருந்தேன். ஆனால் இப்போ ஓர் முடிவுக்கு வந்துவிட்டேன். உமக்கு வாழ்வு தரலாம் என்று..."

"நிறுத்துங்கள் மிஸ்டர் ரமணன்! என்ன நினைத்துவிட்டீர்கள். நீங்கள் அன்று என்னவோ என் உயிரை மீட்க உதவி செய்தது உண்மைதான். அதற்கு விலையாக என் வாழ்வைக் கேட்கிறீர்களா...? என்னசொன்னீர்கள் எனக்கு வாழ்வுதரப் போகிறீர்களா....? அப்படியானால் நான் வாழ்விழந்த நிலையில் இருக்கிறேன் என்றா நினைக்கிறீர்கள். இந்த ஆண்கள் மனமே இப்படித்தான்.

ஏதோ கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்ந்தால் தான் வாழ்க்கை. இல்லையேல்...

மிஸ்டர் ரமணன், உங்களது ரசனை உள்ளத்தை நான் நன்கறிவேன். உங்களது ரசனையின் போக்கை அறிந்து தான் நான் ஒதுங்கி ஒதுங்கி நின்றேன். உங்கள் கூற்றுப்படி பார்த்தால் இப்போ வெளிநாடுகளில் நிற்கும் ஆண்களின் மனைவிமாரெல்லாம் துணையைத் தேடி இருப்பார்கள்.

எத்தனை வருடங்களாக அவர்கள் அந்நாடுகளில் நின்றாலும் தம் துணைவர்களது இனிய நினைவுகளை நெஞ்சிற் சுமந்தவண்ணம் தமிழ்ப்பண்பாடு காத்து, மானங் காத்து வாழ்கிறார்கள் தெரியுமா?

என் கணவன் என்னைப் புரியவில்லை என் உணர்வுகளிற்கு மதிப்பளிக்கவில்லை. தன் மனிதாபிமானமற்ற நடத்தையினால் நாளும் பொழுதும் என் வாழ்க்கையை நரகமாக்கி வாழ்ந்தார். இதனைத் தாங்கமுடியாது அவரைத் தள்ளி வைத்திருக்கிறேன் அவ்வளவே. நான் வாழ்விழந்தாற்தானே நீங்கள் வாழ்வு கொடுக்க" என்று படபடவென ஆத்திரத்துடன் வெடித்தாள்.

இப்படி ஒரு நெருப்பு இவள் உள்ளத்தில் தகிக்கும்.. இப்படியும் ஒரு பக்கம் இவளிடம் இருக்கும் என்று கனவிலும் எதிர்பார்க்காது இவள் புறஅழகால் கவரப்பட்டு ரசித்து ஆண்மைக்கேயுரிய பலவீனத்தை வளர்த்த ரமணனுக்குத் தன்னைச் சுதாகரித்துக் கொள்ள முடியவில்லை.

**அன்னைதாஸன்**
**உரும்பிராய்**

அவனும் ஒரு மனிதன். அவனுக்கும் ஒரு நியாயமான உணர்வு இருக்கும் என்று நினையாது தன் ஒருபக்க நியாயத்தை மட்டுமே கூறிய ராதையால் ஏற்பட்ட ஏமாற்றம், முன்னைய ஏமாற்றம் என்பன இரட்டிப்பான மன அழுத்தத்தைத் தர சுயநினைவிழந்த நிலையில் தன் ஹீரோ கொண்டாவை முறுக்கிய ரமணனின் வாழ்க்கைப் பயணத்தை எதிரே வந்த பாரிய கன்ரர் வாகனம் முடித்து வைத்தது.

யாவும் கற்பனை)

# வெள்ள நிவாரணத்திற்கு உரிய நிதி வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை என சிவில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட அரசாங்க அதிபர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு கோரப்பட்ட நிதியில் 25 சதவீதம்கூட இன்னமும் வழங்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 62 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் தத்தமது குடியிருப்புக்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஒருகோடி 50 லட்சம் ரூபா தேவை என அரசாங்க அதிபரினால் சமூகசேவை அமைச்சிடம் கோரப்பட்டது. ஆனால் இதுவரை 20 லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 69 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 19 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. நிவாரணப் பணிகளுக்கு ஒரு கோடி 75 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டது. ஆனால் 20 லட்சம் ரூபாவே அந்த மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை வைத்துக் கொண்டு நிவாரணப் பணிகளை எப்படி மேற்கொள்வது என சிவில் அதிகாரிகள் வினா எழுப்பியுள்ளனர்.

இந்த நிதி ஒதுக்கீடானது யானைப் பசிக்கு சோளப்பொரி போன்றது என இதனை அவர்கள் விமர்சிக்கின்றார்கள். (ந-4)

# பாவையர்க்கு வரமருளும் பாவை நோன்பு

புராதன சமயமாகிய இந்து சமயம் ஆறு பெரும்பரிவுகளை உடையது. இதனால் இந்து மதம சண் மதம் எனப்போற்றப்பட்டு வருகின்றது. சைவம், சாக்தம், வைஷணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு சமயங்களும் இந்துமதம் என்ற



**திருவெம்பாவை நோன்பு இன்று ஆரம்பமாகின்றது. அதனைச் சிறப்பிக்கும் வகையில் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

ஒரு நெறிக்குள் அடங்குவனவே யாகும். அர்த்தம் உள்ள இந்து மதம் தொன்றுதொட்டே பெருமைக குரிய விரதங்களை எமக்களித் துள்ளமை பூர்வீக புண்ணியமா கும். சக்தி வழிபாட்டின் மகிமை யும், சிவபரத்துவமும் நிறைந்த திருநாட் காலம் மார்கழி நீராடலும பாவை நோன்பும் என அழைக் கப்படும் திருவெம்பாவைத் திரு நாட்காலமாகும். சைவமக்களா கிய நாம் திருவெம்பாவையின் சிறப்பினை உணர்ந்து மார்கழி நீராடி, மாண்புறு திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி பாடி திருக் கோயில் சென்று ஆருத்ரா தரிசன மாம் நடராச தரிசனமும் பெறுங் காலம் மார்கழி மாதம். எங்கும் திரு நடனம், எங்கும் சிவ நாட்டம், எங்கும சிதம்பரம் எனத் தில்லை மூதூ ராடிய திருவடியை வழுத்தும் காலம் திருவெம்பாவைத் திரு நாட்காலம்.

திருவெம்பாவை தினங்கள் பத்து ஆகும். மார்கழி நீராட லும், பாவை நோன் பும் சங்க காலந் தொட்டே தமிழகத் தில் மகோனனதமாக நிகழ்ந்து வருகின் றது. இதனையே தை நீராடல் எனறும கூறு வர். இது முன்னை நாளில் சமூக வழக்கமாயிருந்தது. கால கதியில் சமய வளர்ச்சி பெற்று சிவதத்துவத்துடன் கூடிய விரதமாக விளங்குகின்றது. ஆருத்ரா தரிசனம் காணச்சென்ற திருமூல நாயனார் சிதம்பரத்தில் ஆடலே புரியும் அம்பலவாணனின ஊர்த துவ தாண்டவத்தைக் கண்ணா ரக் கண்டு பாடி மகிழ்கின்றார்.

**'ஆதிபரன் ஆட அங்கைக் கனலாட**
**ஓதும் சடை ஆட உன்மத் தம் உத்தாட**
**பாதிபதி ஆட, பாரண்டம் மீதாட**
**நாதமோடு ஆடினான், நாதாந்த நட்டமே'**

எனத் தில்லை நடராசனின் திரு நடனக் காட்சியைக்களிப்புடன் பாடி எம்மையும் சிவ நடனத்தில் திளைக்கவைத்துள்ளார்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற தன்னம்பிக்கைக்குத் தெய் வத் திருவருள் துணைவேண்டி நிற்கும் பாவை நோன்பின் மகிமை எம்மாற் சொல்லுந்தரமன்று. மார் கழி நீராடி, கன்னிப் பெண்கள் மண்ணினாலே பாவை அமைத்து வழிபட்டு நோன்பு செய்த முறை யும் இருந்ததாகச் சங்க இலக்கி யங்கள் கூறுகின்றன.

கன்னியர் மார்கழித் திங்களில வைகறைப்பொழுதில் துயிலெ ழுந்து தோழியரையும் எழுப்பி அழைத்துக் கொண்டு, இறைவன் சீர்பாடிச் சென்று கஙகை நீராடி ஈரமண்ணாலே பாவை செய்து வழிபட்டுவருவது வழக்கம். இந்த நோனபிலே தாம் விரும்பிய நல்ல கணவரை அடைய வேண்டும்'. அவரோடு சேர்ந்து இறைபணி புரியவேண்டும். பருவம் மாறாது மழை பொழியவேண்டும். நாடு செழிக்கவேண்டும். மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டுமென வேண்டுதல் செய் வர். திருவெம்பாவைப் பாடலைத் திருவாசகத்தின் ஊடகமாகத் தந்த மாணிக்கவாசக சுவாமி கள் தெய்வத்தன்மை பொருந்த கன்னியர் நீராடுதலையும், தோழி யரைத் துயில் எழும்புதலையும உரையாடலாகக் கொண்டு அவர் கள் பாடிய பாவனையில் திருவெம் பாவைப் பாடல்களாகத் திரு வண்ணாமலையில் அருளிச் செய் தார். திருவெம்பாவைப் பாடல்கள் திருவண்ணாமலை அருளைப் பெற்ற பாடல்களாகும்.

மனிதருக்கு ஓர் ஆண்டு தேவ ருக்கு ஒருநாள் அந்த நாளின் வைகறை மார்கழி, உதயகாலம் தை நவசக்திகளும் வைகறை யிலே துயிலெழுந்து நீராடி பரா சக்தியை வியந்து பாடியதாக அமைந்தது திருவெம்பாவை என்பர் தத்துவ ஞானியர். கன்னியர் சிவப ரத்துவத்தை இவ்வாறு வியந்து பாடி எம்மையும் மெய்யுருக வைத துள்ளனர்.

**'முத்தன்ன வெண்ணகை யாய் முன்வந்தெதிர் எழுந்தென்**
**அத்தன், ஆனந்தன், அமுதன என்றௌ்ளூறித்**
**தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்**
**பத்துடையீர், ஈசன் பழ அடி யீர் பாங்குடையீர்**
**புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ**
**எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?**
**சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை**
**இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய'**

பாவை நோன்பின் வாயிலாக நாம் மெய்யருள் பெற்று சிவப் பணி புரிந்து சிறப்புறுவோமாக. ஆர்தத பிறவித்துயர் கெட ஆர்த் தாடும் தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம் பலத்தீயாடும் கூத்தன புகழைப் பாடி மார்கழி நீராடி பாவை நோன்பு நோற்று இன் புற்று வாழ்வோம்.

**'வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்**
**சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து**
**தெவிட்டாத தங்கனிச் 'சுவை கலந்து**
**என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாது இனிப்பதுவே**

**த.மணிமேகலை**
**புங்குடுதீவு**

என்றவாறு ஆலயங்கள் தோறும் திருவெம்பாவைப் பாடி இறையருள் பெறுவோம்.□

# யாழ்ப்பாணம் - பலாலி வீதியின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

பலாலி - யாழ்ப்பாணம் வீதி யின் சிலபகுதிகள் மிகமோச மான நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக மேற்படி வீதியின் திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்திதொடக்கம் பரமேஸ்வரா சந்திவரையான பகுதி மற்றும் இலுப்பையடிச்சந்தி தொடக்கம் ஆனைப்பந்தி சந்தி வரையான பகுதி என்பன மிகமோசமாக சேதமடைந்த நிலையில் காணப் படுகின்றன.

பாரிய குன்றும் குழியுமாக உள்ள இவ் வீதிப்பகுதியால் பயணிக்கும் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர்.

அத்துடன், வீதியின் சீரற்ற தன்மைகள் காரணமாக விபத் துக்கள் ஏற்படும் அபாயங்களும் காணப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க மழை நேரங்களில் இவ் வீதியில் காணப்படும் குழிகளுள் வெள் ளம் தேங்கிநிற்பதன் காரண மாக இவ் வீதி மேலும் சேதமடை ந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், சம்பந்தப்பட்டவர் கள் இவ்வீதியின் சீரற்ற தன்மை களைக் கவனத்தில் கொண்டு அதனை திருத்தி அமைக்க முன் வராமை குறித்து மக்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்.மாவட் டத்தில் போக்குவரத்து முக்கி யத்துவம் வாய்ந்த வீதிகளுள் பலாலி வீதியும் பிரதானமான தொன்று என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

# லெப். கேணல் மறவனின் வித்துடல் விதைக்கப்பட்டது

(மருதங்கேணி)

கடற்புலிகளின் மூத்த உறுப் பினர் லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் நேற்றுமுன் தினம உடுத்துறை மாவீரர் துயி லும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

தாளையடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து வித்துடல் எடுத்துவரப்பட்டுத் தாளையடி புனித அந்தோனியார் ஆலயத் தில் இறுதித் திருப்பலிப்பூசை நடைபெற்றது. பின்னர் சகல இராணுவ மரியாதையுடன் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு அஞ்சலிக்கூட்டம் இடம் பெற்றது.

கடற்புலிகளின் மாவீரர் பணி மனைப பொறுப்பாளர் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழவில் கடற்புலிகளின் சிறப் புத் தளபதி கேணல் சூசை கலந்துகொண்டார். பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணி மனைப பொறுப்பாளர் பொன்தியா கம், தமிழீழ கல்வித்துறைப் பொறுபபாளர் வே.இளங்குமரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். ஈகச்சுடரை மறவன் மாஸ்ரரின் துணைவியார் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும், வடமராட்சி கிழகு உதவி அரசாங்க அதிபர் ரி.ஜெயசீலனும் அணிவித்தனர்.

இறுதி வணக்க நிகழ்வினைத தொடர்ந்து வித்துடல் விதை குழியில் விதைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கடற்றொழி லாளர் சங்கங்களின் அங்கத்த வர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (த-35)


## வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் ஏ-9 பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகார ரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி - 20.12.2004 ம் திகதி முதல் 23.12.2004 ம் திகதி வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 24.12.2004 ம் திகதி பி.ப.1.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி-24.12.2004 ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, " செயலாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், நீர்வேலி " என்ற முகவரிக்கும், இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.29, செட்டித்தெரு, நல்லூர்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 24.12.2004 ம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடியவைப் புப் பணம் | மீளளிக்கப் படாதகேள விப்பத்திரப் பணம் | மீளளிக்கப் படாதபெறுமதி சேர் வரி |
|---|---|---|---|---|
| 01. | கோப்பாய் கிராமசபை வீதி திருத்தவேலை | 3000.00 | 500.00 | 75.00 |
| 02. | கோப்பாய் பெரியபுலம் வீதி " | 4000.00 | 500.00 | 75.00 |
| 03. | புத்தூர் 9ம் கட்டை வீதி " | 4000.00 | 500.00 | 75.00 |
| 04. | புத்தூர் புன்னைக்குளம் வீதி " | 9000.00 | 500.00 | 75.00 |
| 05. | புத்தூர் கவடி ஒல்லை வீதி " | 8000.00 | 500.00 | 75.00 |
| 06. | நீர்வேலி மோதிரக்கேணி வீதி " | 9000.00 | 500.00 | 75.00 |
| 07. | உரும்பிராய் தெற்கு முருகன் கோவில் வீதி திருத்தவேலை (மூன்று கோவிலடி) | 4000.00 | 500.00 | 75.00 |
| 08. | உரும்பிராய் கிழக்கு தம்பசிட்டிவீதி " | 6000.00 | 500.00 | 75.00 |
| 09. | உரும்பிராய் கிழக்கு சாத்தாப்புவம் வீதி திருத்தவேலை | 3000.00 | 500.00 | 75.00 |
| 10. | கோப்பாய் வீரபத்திரர் கோவில் வீதி திருத்தவேலை | 4000.00 | 500.00 | 75.00 |
| 11. | அச்சுவேலி காலாணை வீதி " | 8700.00 | 500.00 | 75.00 |
| 12. | வாதரவத்தை வீரவாணி இனைப்புவீதி " | 4000.00 | 500.00 | 75.00 |

இது தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.


இராசரத்தினம் இராசதுரை
செயலாளர்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
16.12.2004.

(C/844)

# அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் முதலாவது டெஸ்ட் போட்டி

அவுஸ்திரேலியா- பாகிஸ் தான் அணிகளுக்கிடையே பேர்த்தில் நடைபெறும் முதலாவது கிரிக்கெற்



டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.


துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, ஆரம்ப 5 விக்கெற்றுக்களை 78 ஓட்டங்களுக்கு இழந்தது. சொளகப் அக்தாரும் முகமட் சமியும் சிறப்பாகப் பந்துவீசி விக்கெற்றுக்களை வீழ்த்தினர். ஆறாவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த லாங்கரும் கில்கிறிஸ்டும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததால் அவுஸ்திரேலிய அணி ஸ்தரமான நிலையை அடைந்தது. கில் கிறிஸ்ட் 69 ஓட்டங்களையும் லாங்கர் 191 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களுக்கு அடுத்தபடியாக உதிரிகளாக 30 ஓட்டங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் 191 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் லாங்கர் டெஸ்ட் போட்டிகளில் தனது 21 ஆவது சதத்தைப் பெற்றதுடன், இந்த ஆண்டில் அதிக ஓட்டங்களை அதாவது மொத்தம் 1319 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவரது 191 ஓட்டத்தில் 3 சிக்ஸர்களும் 19 பவுண்டரிகளும் அடங்கும். பந்து வீச்சில், அக்தார் -5, சமி-3, ரஸாக்-2



விக்கெற்றுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை விளையாடிய பாகிஸ்தான் அணி 73 ஆவது ஓவரில் 8 விக்கெற்றுக்களை இழந்து 155 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்து இக்கட்டான நிலைக்குள்ளானது.

ஆரம்ப வீரர்கள் சல்மான் பட்டும் இம்ரான் பர்ஹத்தும் சிறப்பாக ஆடிய போதும் அவர்களால் தொடர்ந்து நிலைத்து ஆடமுடியவில்லை. பாகிஸ்தான் அணிசார்பில் சல்மான் பட்-



17, இம்ரான் பர்ஹத் -18, யூனிஸ்கான் -42, அப்துல்ரஸாக் -21 ஓட்டங்களை எடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணிசார்பில் பந்து வீச்சில் காஸ்பரோவிஸ் மிகச் சிறப்பாகப் பந்து வீசி 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

ஷேர்ன் வோன் 3விக் கெற்றுக்களையும் கில்லெஸ்பி 1 விக் கெற்றையும் வீழ்த்தினர் ஆட்டம் தொடர்கிறது.

(து-7)

# பஞ்சாப்-தமிழக கிரிக்கெற் வெற்றி தோல்வியின்றி முடிவு

சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற பஞ்சாப்- தமிழக அணிகளுக்கிடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

கடந்த திங்களன்று ஆரம்பமான இப்போட்டியில் தமிழக அணி தனது முதல் இன்னிங்ஸில் 244 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரீராம்-38, வாசுதேவதாஸ் ஆட்டமிழக்காது-91,ஸ்ரீநிவாஸ்-52 ஓட்டங்களைப் பெற்றனர். வி.ஆர்.சிங் 5விக்கெற்றுக்களையும் உனியால் 4விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய பஞ்சாப் அணி 214ஓட்டங்களைப் பெற்றது. ரவ்நீத் ரிக்கி-71,கக்கார் ஆட்டமிழக்காது-29ஓட்டங்களைப் பெற்றனர். ஜேசுராஜ்-7விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய தமிழக அணி நேற்று முன்தினம் இறுதிநாள் ஆட்டமுடிவில் 9விக்கெற் இழப்புக்கு 408 ஓட்டங்களைப் பெற்றது.

வித்யுத்-99,பத்ரி நாத்- 97,சரத்-112 ஓட்டங்களைப் பெற்றனர். நவ்தீப் சிங்-3விக்கெற்றுகளை வீழ்த்தினார்.

இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.இத்தொடரில் பஞ்சாப் அணி 16 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. தமிழகத்திற்கு 11 புள்ளிகள். இத்தொடரின் அடுத்த போட்டி தமிழகம்- பரோடா அணிகளிடையே எதிர்வரும் புதனன்று ஆரம்பமாகும். து-7)

# காற்பந்தாட்ட நடுவராக ஒரேயொரு இந்தியப் பெண்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு இந்தியப் பெண்ணான பெண்ட்லா டிகோத் கால்பந்தாட்ட நடுவராகப் பணியாற்றுகிறார்.

கேரள மாநிலம் எர்ணாகுளத்தைச் சேர்ந்த இவர், சர்வதேச கால்பந்துக் கழகத்தின், (FIFa) அங்கீகாரம் பெற்ற நடுவராவார்.

1988ஆம் ஆண்டிலிருந்து கால்பந்தாட்டத்தை ஆர்வத்துடன் பயின்று ஆறு தடவை இந்தியாவுக்காகச் சர்வதேசப் போட்டிகளிலும் 3 தடவை ஆசியக் கிண்ண கால்பந் தாட்டப் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

1995ஆம் ஆண்டு மூன்றாம் பிரிவு நடுவராகத் தகுதி பெற்ற பெண்ட்லா, 2000ஆம் ஆண்டு தேசிய நடுவராகத் தேர்வு பெற்றார். 2001இல் சர்வதேச கால்பந்து நடுவராக அங்கீகாரம் பெற்றார்.

சீனாவிலும் தாய்லாந்திலும் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டிகள், மலேஷியாவிலும், வியட்நாமிலும் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி ஆகியவற்றில் பெண்ட்லா நடுவராகப் பணியாற்றியுள்ளார். சர்வதேச அங்கீகாரம் பெற்ற 18 நடுவர்களில் இந்தியாவின் சார்பில் பெண்டாடிகோத் மட்டுமே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


(து-7)

# டென்னிஸ் வீராங்கனை கூர்னிகோவா பொப் பாடகர் ரகசியத் திருமணம்

ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை அனா கூர்னிகோவா, அமெரிக்க பிரபல பொப் இசைப்பாடகர் அன்ரிக் இக்லெஷியாவை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இவர்களது திருமணம் கடந்த மாதம் மெக்ஸிகோவில் ரகசியமாக நடைபெற்றதாகவும் நெருங்கிய உறவினர், நண்பர்கள் மட்டுமே திருமண வைபவத்தில் கலந்து கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் புளோரிடாவில் அண்மையில் நல நிதிக்காக நடைபெற்ற டென்னிஸ் போட்டியின் போது திருமணம் செய்ததை உறுதிப்படுத்தும் வகையில் கூர்னிகோவா மோதிரம் அணிந்திதிருந்ததாக அமெரிக்க



வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

29வயதாகும் அன்ரிக் சாதாரணமானவரல்ல. மிகவும் வசீரகமானவர். அதனாலேயே அவரைத் திருமணம் செய்தேன் என்கிறார் கூர்னிகோவா.

23வயதாகும் கவர்ச்சி வீராங்கனை கூர்னிகோவா, 2002ஆம் ஆண்டு லாடின் குருனர்ஸ் இசை நிகழ்ச்சியின் போது முதன்முதலாக இக்லெஷியாவைச் சந்தித்தார். அப்போது மலர்ந்த காதல் இப்போது திருமணத்தில் முடிந்திருக்கிறது.

தனது அழகால் டென்னிஸ் உலகைக் கலக்கிய கூர்னிகோவா, கடந்த மார்ச் மாதம் தொழில் ரீதியாக டென்னிஸில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

முக்கிய போட்டிகள் எதிலும் பட்டங்களை வெல்லாதபோதிலும் தனது போட்டிகளைப் பார்க்க வந்த ஏராளமான ரசிகர்களின் உள்ளங்களை வென்றுள்ளார். (து-7)

விளையாட்டு செய்திகள்

# எஸ்.பி.யின் கண்ணுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் எஸ்.பி.திஸநாயக்க எம்.பிக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

கண் சத்திரசிகிச்சைக்கான வைத்திய நிபுணரின் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டால் இதற்கான நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு கண் சத்திரசிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரும் கடிதத்தை அவரது சட்டத்தரணி சிறைச்சாலை ஆணையாருக்கு வழங்கியுள்ளமை தெரிந்ததே. (க)

# கர்ப்பம் தரித்திருக்கும் அரசபெண் ஊழியர்களுக்கு ஒருமணி நேரகடமை குறைப்பு

பெண் அரச அலுவலர் ஒருவர் கர்ப்பம் தரித்திருக்கும் காலம் 5 மாதங்களாகும் போது, கடமை நேரத்தில் ஒரு மணித்தியாலத்தை குறைப்புச் செய்து சலுகை வழங்குமாறு அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்சீ. மண்ணப் பெருமவினால் வெளியிடப்பட்ட சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சலுகை பிரசவ விடு முறை பெறும் வரை மட்டுமாகும்.

3/2004 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலும் பல சலுகைகள் வருமாறு

கர்ப்பமுற்றிருக்கும் பெண் அரச ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள் முடிவடைந்தபின் அவரின் சேவைக்காலத்தினுள்ளான பிள்ளை பிறப்பு ஒன்றுக்கு ஆகக்கூடிய 6மாதகாலத்திற்கு சம்பளமற்ற விசேட பிரசவவிடுமுறை பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு குழந்தை அசாதாரண நிலையில் பிறந்து அந்தப் பெண் ஊழியரின் கண்காணிப்பு தொடர்ந்து தேவையெனின் பெண்நோய்பிரசவ மருத்துவ நிபுணரின் சிபார்சு பெறப்பட்டால் விசேடலீவு வழங்கப்படும். (க)

# மட்டு.வெள்ள நிவாரணத்திற்கு உரிய நிதி வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 62 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நிவாரண உதவிக்காக 15மில்லியன் ரூபா கோரப்பட்டிருந்தபோதும், நான்கு மில்லியனே கிடைத்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே. சண்முகம் தெரிவித்துள்ளார்.

கிடைத்திருக்கும் நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கப் போதுமானதல்ல என சமூக சேவைகள் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிட்ட அரச அதிபர், தொடர்ச்சியாக மழை பெய்வதால் வெள்ள அபாயம் தொடரும் எனவும், பாதிப்புற்றோர் தொகை அதிகரிக்கு எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சமூக சேவைகள் அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சென்று வெள்ளத்தால் பாதிப்புற்ற பகுதிகளை பார்வையிட்டுள்ளது.

(ந-4)


## பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான நாடக ஆற்றுகை

யுத்த காலங்களில் பெண்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும்,மாறிய மனிதமனங்களின் எண்ணப்பாடுகளையும் சித்தரிக்கும்




காலம்:
19.12.2004 (ஞாயிறு)
காலை.10.30 - மாலை.3.30

இடம்:
கைலாசபதி கலையரங்கு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு: ரூபா. 100, ரூபா.50

Active Theatre Movement (C/845) TRRO Ltd

# நிவாரண உதவிகளை நம்பி வாழும் நிலைமை மாற்றப்படல் வேண்டும்

## கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் உரை

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் 37 ஆயிரம் குடும்பங்களில் 27 ஆயிரம் குடும்பங்கள் நிவாரணத்தையே நம்பி வாழ்கின்றனர். இதுவொரு வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விவசாயத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட விவசாயிகள் கௌரவிப்பு விழாவிலே முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று பல நாடுகள் விவசாயத்தில் தன்னிறைவு பெற்று வருகின்ற நிலையில் எமது மக்கள் மட்டும் தன்னிறைவு பெற முடியாதுள்ளது.

இதற்கு நாம் தொடர்ந்தும் ஒரேமாதிரியான விவசாய நடைமுறைகளையே பின்பற்றி வருகின்றமையே காரணம்.

குறிப்பாக எமது இளைஞர் யுவதிகள் எமது பாரம்பரிய விவசாய செய்கையில் ஈடுபட முன்வரவேண்டும். அப்படி அவர்கள் முன்வந்து சிறந்தமுறையில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது மாவட்டமும் விவசாயத்தில் முன்னேறமுடியும்.

எனவே கமக்கார அமைப்புக்கள் அனைத்தும் இதனைக் கவனத்தில்கொண்டு இளைஞர் யுவதிகளையும் விவசாய நடவடிக்கைகளில் இணைந்து விவசாய செய்கையினை சிறந்த முறையில் முன்னெடுக்க உறுதி பூணவேண்டும் என்றார். (ப-35)

# துன்னாலை தெற்கில் வெள்ளம் தேங்கியுள்ளது

## நோய்கள் பரவும் அபாயம்

(மருதங்கேணி)

துன்னாலை தெற்கு மிண்டன் வாய்க்கால் ஓரங்களில் மண் அகழப்பட்ட குழிகளில் மழை வெள்ளம் தேங்கிநிற்பதனால் அப்பகுதி மக்களுக்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைவெள்ளத்தினால் அள்ளப்பட்டு வரும் மண்ணை சட்டவிரோதமாக அகழ்வதனால் இங்கு பாரிய கிடங்குகள் காணப்படுகிறது. அதில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் அங்கு காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் பரவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ப-35)

# வலுக்கூடிய இயந்திரப்படகுகளினை தொழில் நடவடிக்கைகளுக்கு அனுமதிக்குக

## யாழ்.கடற்றொழிலாளர்கள் சம்மேளனத் தலைவர் கோரிக்கை

(வடமராட்சி)

கடற்றொழிலுக்கு கூடிய வலுவுள்ள இயந்திரத்தை பாவிப்பதற்கு கடற்படையினரால் விதிக்கப்பட்ட தடைகளை நீக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் சம்மேளன தலைவர் எஸ்.தவரட்ணம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாழ். குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின் குடாநாட்டுக் கடற்பரப்பில் குதிரை வலுவுக்குக் கூடிய இயந்திரங்கள் பூட்டி படகுகளில் தொழில் செய்வதைப் படையினர் தடைசெய்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிற்குள் இடம்பெறும் கடல் மார்க்கமான ஊடுருவல்கள், அத்துமீறல்கள் என்பனவற்றை கட்டுப்படுத்துதல் என்ற போர்வையில் கடற்படையினரால் விதிக்கப்பட்ட இத்தடைகள் காரணமாக குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளதால் மீனவர்கள் தொழில்வாய்ப்பை இழக்கின்றமையையும் சுட்டிகாட்டியே சம்மேளனத் தலைவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

(ப-35)

# நாரந்தனை தெற்கில் வெள்ளத்தால் இடப்பெயர்வு

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை தெற்கு புதுக்குடியிருப்புக் கிராமத்தில் இருந்து முப்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கடந்த சில நாட்களாக பெய்த கடும்மழை காரணமாக வீடுகளுக்குள் மழைவெள்ளம் உட்புகுந்தமையை அடுத்தே மேற்படி குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இடப்பெயர்ந்த குடும்பங்கள் நாரந்தனை புனித இராயப்பர் தேவாலயத்தில் தஞ்சமடைந்து தங்கியுள்ளார்கள்.

இக்குடும்பங்களின் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

(ப- 75)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(துன்னாலை)

மடம்வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கஸ்தூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, பயண அனுமதிஅட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வடபிராந்திய போக்குவரத்துசபை, யாழ் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர் இதனை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ப-113)

# மாத்தறையில் சளிச்சுரம் பறவைக் காய்ச்சலா?

(மாத்தறை)

மாத்தறை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் சளிச்சுரம் போன்ற ஒருவகைக் காய்ச்சல் தோன்றியுள்ளது. இக்காய்ச்சல் மேலும் பல இடங்களுக்குப் பரவுவதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவு, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த குழுக்கள் இதற்கான பரிசீலனைகளை மேற்கொண்டுவருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நோயாளிகளின் இரத்தம் சளி ஆகியவை எடுக்கப்பட்டு பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்நோய் காரணமாக இதுவரை 4பேர் இறந்துள்ளனர். நோய்க்காரணியாகக் கருதப்படும் நுண்ணுயிர் தொற்றுவதைத் தடுப்பதற்காக எம்பிலிப்பிட்டிய, மாத்தறை மருத்துவமனைகளில் உத்தியோகத்தர்களுக்குப் பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குத் தடுப்புமருந்துகளும் அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது பறவைக்காய்ச்சலாக இருக்கலாம் என்ற கருத்தை விலங்குற்பத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே.ஆர் அமரசேகர நிராகரித்திருக்கிறார். (ற-7)

## சுகாதார சீர்கேடு

(பொலிகண்டி)

பொலிகண்டி கடற்கரைப் பகுதிகளில் உள்ள கிணறுகளுக்குள் பிற வெள்ளங்கள் செல்வதால் கிணறு அசுத்தப்பட்டுள்ளது.

இதனால் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ப-106)

பரு:கிராமக்கோட்டிலிருந்து - மந்திகை வரையான

# வாய்க்கால் சீரின்மையால் மழைவெள்ளம் தேக்கம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேசசபையினால் நிர்வகிக்கப்பட்டுவரும் கிராமக் கோட்டிலிருந்து மந்திகை ஆலடிச்சந்தை வரையிலான வெள்ள வாய்க்கால் கடந்த 25 வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்துவருகிறது.

இதனால் மழைவெள்ளம் பாய்வதற்கு வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கிநிற்பதனால் அப்பகுதியூடான போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழைவெள்ளம் தேங்கி நிற்பதனால் தொற்று நோய்பரவும் அபாயம் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ப-35,9)

## விற்பனை

நெல்லியடி பருத்தித்துறை வீதியில் மொறட்டுவப் பகுதி வியாபாரிகளால் கலை அழகு மிக்க தளபாடங்கள் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இவ்விற்பனை இடம்பெறுவதாக அறியப்படுகின்றது. (ப-101)

# சுற்றாடல் மாசடைதலைத் தவிர்க்க கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வர்த்தகச் செயற்பாடுகளை கொழும்பு மாவட்டத்திற்கு அப்பால் மேற்கொள்ளுமாறு கைத்தொழில் அமைச்சு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

தொழிற்சாலைகள் கொழும்பையும் அதன் புறநகர்ப்பகுதிகளையும் மையமாகக்கொண்டு அமைந்திருப்பதனால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதலையும் ஏனைய பாதிப்புக்களையும் தவிர்ப்பதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் ஏனைய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுமென கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மாகாண மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேற்கு, வடமேற்கு மாகாணங்களில் ஏற்கனவே எட்டுக் கைத்தொழில் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## யாழ்.மாவட்டத்திலுள்ள

# ஐம்பது பயிற்சிப் பட்டதாரிகள் 21ஆம் திகதி ஜனாதிபதியை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பயிற்சி பெறும் பட்டதாரிகளில் ஐம்பது பேர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்கவுள்ளனர்.

இவ்விசேட சந்திப்பானது எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இவ்விசேட சந்திப்புக்கு ஐம்பது பயிற்சிப் பட்டதாரிகளை அழைத்துச்செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட செயலகப் பட்டதாரிகள் பயிலுனர்களுக்கான இணைப்பதிகாரி ககனகரத்தினம் மேற்கொண்டு வருகிறார். (ற-16,19)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

'சமுர்த்தி நலன்புரிச் சட்டம் அமுலாக்கல்' தொடர்பாக பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன. இப்பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன் கிழமையும் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புக்கள் யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சமுர்த்தி அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், கிராமமட்ட கணக்கெடுப்பாளர்கள் ஆகியோருக்கே நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

## கைப்பை கண்டெடுப்பு

(கோண்டாவில்)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் நல்லூரை அண்டிய பகுதியில் ஓர் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு பனை அபிவிருத்திச் சபையின் நல்லூர் கற்பக விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கைப்பையில் ஒரு கறுப்புநிற கோட் ஒன்றும் டயறி ஒன்றும் காணப்படுவதாகத் தெரியவருகின்றது, இக்கைப்பையில் உள்ள டயறியில் கே.பாலகிருஸ்ணன் சட்டத்தரணி என குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-130)

# அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களாக 1000 இடங்கள் தெரிவாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு உட்பட நாடுமுழுவதிலும் 1000 இடங்கள் அகழ்வாராய்ச்சிக்குரிய பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளதாக கலாசாரத் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அகழ்வாராய்ச்சிக்குரிய இடங்களாக இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் புராதன பொருட்கள் இருப்பதால் இவற்றை அரசே பேணிப் பாதுகாக்கவேண்டியுள்ளது.

கலாசாரத் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் விஜித ஹேரத்தின் யோசனைப்படி, இத்திட்டம் அம்பாறை, உஹன, றஜகலதென்ன பிரதேசங்களிலிருந்து தொடக்கி வைக்கப்படவுள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்

இவ்வேலைத்திட்டங்கள் எதிர்வரும் 2005 ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## மிதிவெடி அகற்றல்

(யாழ்ப்பாணம்)

டனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனம் கடந்த 3 மாதகாலப் பகுதியில் புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கும் மல்லாகத்துக்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் ஆயிரத்துநூறு மிதிவெடிகளை அகற்றியுள்ளதாக டனிஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் தெரிவித்துள்ளார். (ற-19)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தொழில் திறனை மேம்படுத்துவதற்காக வடக்கு -கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்ட நிதியுதவியுடன் யாழ்.செயலகத்தினால் நடாத்தப்படும் விசேட செயலமர்வுகள் இன்றும்,நாளையும், நாளைமறுதினமும் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00மணி தொடக்கம் மாலை வரை நடைபெறவுள்ளது

இச்செயலமர்வில் யாழ்.மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் சகல தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.செயலகத் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை கடிதமூலம் அறிவித்துள்ளார். (ப-47)

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் - குறள்

வலம்புரி

# அரசாங்க சேவை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு இம்மாதம் வழங்கப்படும்

## அமைச்சர் அமரசிறி தொடங்கொட உறுதியளிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுககென அதிகரிக்கப்பட்ட சம்பளவுயர்வு இம்மாதம் வழங்கப்படுமென்று அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட உறுதியளித்துள்ளார்.

அத்துடன், அதற்கான சுற்றறிக்கைகள் அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படாத போதிலும் கொடுப்பனவானது வவுச்சர்கள் மூலம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அவரது அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட சம்பளவுயர்வு,ஓய்வூதியம் பெறுவோருக்கும் அரச ஊழியர்களுக்கும் இம் மாதமே வழங்கப்படும். இதற்கான சுற்றறிக்கையைத் தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்ட போதும், வவுச்சர்கள் மூலம் அதிகரிக்கப்பட்ட இந்தத் தொகைகள் வழங்கப்படும்.

அவசரமாக சுற்றிக்கைகள் தயாரிப்பது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும். எனவே தான் இந்த மாற்றுத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து முகாமைத்துவ உதவிச் சேவையாளர் பயிற்சிகள் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர், கணக்குப் பதிவாளர், களஞ்சியக் காப்பாளர் பதவிகள் அனைத்தும் முகாமைத்துவ சேவையின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

இதற்காக அவர்களுக்கு 6மாத கால பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதன்பின்னர் தேவைகளுக்காக வரும் மக்களை எழுதுவினைஞர் இல்லை. கணக்குப் பதிவாளர் இல்லையெனத் திருப்பி அனுப்ப முடியாது. அனைத்துச் சேவைகளையும் செய்யக் கூடியதாகவே இப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் அரச சேவையைச் செயற்பாடு மிக்கதாக்கி மக்களுக்கு சேவை வழங்கவும், அரச சேவையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கமாகும்.

ஒருபோதும் அரச சேவைகள் தனியாரிடம் கையளிககவோ, தனியார் மயப்படுத்தவோ மாட்டாது. அரச ஊழியர்களுக்கு சத்திரசிகிச்சைக்காக 5இலட்சம் ரூபா வழங்கபபடவுள்ளது. 3வருடத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்காக 10 ஆயிரம்ரூபா பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உட்பட மற்றும் பல புதிய சலுகைகளும் வழங்கப்படவுள்ளன.

அரச சேவையில் இடமாற்றங்கள் தொடர்பான சட்டங்கள மறுசீரமைக்கப்படவேண்டும். தற்போது சிக்கலான அரச சேவையே எம்மிடமுள்ளது அதனைச் சீராக்க வேண்டும். உடனடியாக அதனைச் செய்ய முடியாது எனினும் படிப்படியா [illegible] நிவர்த்தி செய்யப்படும் என உறுதியளித்தார். (ந-4)

# இலங்கை-இந்திய கூட்டுக்கடற்படைப் பயிற்சி மேற்குக் கடற்பரப்பில் வியாழனன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை- இந்திய கூட்டுக்கடற்படைப் பயிற்சி "ஒப்ரேசன் எக்ஸஸைஸ்" என்ற பெயரில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மேற்கு கடற்பரப்பில் இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆரம்ப நிகழ்வில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன, இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் இலங்கை- இந்திய பாதுகாப்பு உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இரண்டு இந்தியக் கப்பல்களும் ஒரு உலங்குவானூர்தியும் இப்பயிற்சிக்காக இந்தியாவில் இருந்து இங்கு வந்துள்ளன.

இலங்கைக் கடற்படையின் 'சயுர' என்ற ஆழ்கடல ரோந்துக் கப்பல் 'ஜயசாகர' என்ற போர்க்கப்பல் மற்றும இரண்டு அதிவேக 'டோரா' தாக்குதல் கப்பல்களும் 450 கடற்படையினரும் இப் பயிற்சிகளில் பங்கு கொண்டுள்ளனர்.

இப் பயிற்சியின் போது இந்திய கடற்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று இயநதிரக் கோளாறுக்குள்ளானது அதனையடுத்து உடனடியாக இவ் உலங்கு வானூர்தி கடற்படைத தளத்துக்குச் சென்று பத்திரமாகத் தரையிறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (ந-5)

# எஸ்.பி.யின் விடுதலையைத் துரிதப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு நடவடிக்கை

(கொழும்பு)

எஸ்.பி. திஸநாயக்கவின் விடுதலையைப் துரிதப்படுத்தும் வகையில் இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இணையத்தளத்தில் எஸ்.பி.திஸநாயக்கவின் வாழ்க்கை வரலாறு உட்பட அவரின் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக விளக்கப்படவுள்ளது.

இதேவேளை, எஸ்.பி. திஸநாயக்கவின் விடுதலைக்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் அடங்கிய குழு பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடியுள்ளது.

கொழும்பு மாநகரசபை மேயரின் இல்லத்தில் மேற்படி சநதிப்பு இடம்பெற்றுள்ளது. எஸ்.பி.யின் விடுதலை வேண்டி நாடளாவிய ரீதியில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.கைவிலங்குடன் கைகளை மேலே தூக்கி கையசைககும் எஸ்.பி.யின் படத்துடன் கூடிய சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளன. (ந-9)

# புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் அரியாலையில் 17 மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கம ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்தும் தரம்-5க்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டுக்கு 17மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்திட்டம் அரியாலையைச் சேர்ந்த, படிப்பில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் சீருடை,காலணி ஆகியவை வழங்கப்படவுள்ளதுடன். பிரத்தியேக பின்னூட்டல் வகுப்புகளும் நடத்தப்படவுள்ளன.

மாணவர் தெரிவிற்கான பதிவுகள் இன்றும் நாளையும் தினமும் காலை 10.00மணி முதல் பி.ப.2.00 மணி வரை யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

பதிவு செய்யும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிககு யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. தெரிவுசெய்யபபடும் மாணவாகளுக்கு உதவிப் பொருட்கள் அன்பளிப்புச் செயயும் வைபவம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (ந-5)

# விவசாயிகள் பாதிப்பு

(கல்வயல்)

கல்வயல், மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் அழிவடையும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ப-36)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

முயற்சி என்பது வேண்டும். தெரிந்தே நீங்களாகவே முயற்சியைத் தொடர வேண்டும். அங்குலம் அங்குலமாக நாம் முன்னேறுவோம் கடைசியில் உண்மையான செல்வத்தை உணர்வோம், அடைவோம் . அதனை யாரும் நம்மிடமிருந்து பறிக்க முடியாது. யாரும் அழிக்க முடியாது. அந்த இன்பத்தை எந்தத் துயரமும் அழிக்க முடியாது.

சுவாமி விவேகானந்தர்

# தமிழ் மொழிக்கு உரிய இடம் வேண்டும்

எமது தாய் மொழியாகிய தமிழின் சிறப்புத் தன்மையை பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு. இனம், மொழி என்ற இரண்டு விடயமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. எவனொருவன் தனது இனத்தை- மொழியை மறந்து செயற்படுகிறானோ அவனால் மக்கள் மயப்பட்ட எந்த சாதனையையும் படைத்துவிட முடியாது என்பது அறிவியலாளர்கள் கண்ட முடிவு.

எனவே ,ஒரு இனத்துவத்தின் பெருமை-அதனுடைய பண்பாட்டு முகவரிகள் உலகளாவியரீதியில் வியாபகம் பெறவேண்டுமாயின் இனம்சார்மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு உரிய இடம் என்ற பதம் எழுகின்ற போதே அதுபற்றிய விரிவான விளக்கம் தேவையாகின்றது. அதாவது தமிழ் மொழிக்கான உரிய இடம் என்பது எது? அந்த உரிய இடம் தமிழுக்கு கிடைக்கின்றதா? என்பதே விளக்கத்தில் இடம்பெறவேண்டிய விடயங்கள் ஆகும்.

அவ்வகையில் தமிழ் மொழிக்கான உரியஇடம் என்பது, இரண்டு வகையில் நோக்கப்படக் கூடியதாகும் அதில் ஒன்று தமிழ்மக்களால் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுகின்றதா? என்பது. மற்றையது இலங்கை அரசினால் தமிழ் மொழிக்கான உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளதா? என்பது.

இங்கு இலங்கை அரசு தமிழிற்கான உரிய இடத்தை -தனித்துவத்தை வழங்கவில்லை என்பது. சொல்லித் தெரிய வேண்டிய விடயம் அன்று. இன்று நடைபெறுகின்ற விடுதலைப்போராட்டத்தின் அடித்தளமே, இலங்கை அரசுகள் தமிழ் மொழிக்கு உரியஇடம் தரமறுத்ததினால் ஏற்பட்டதாகும்.

அவ்வகையில் அதனை ஒரு புறம் வைத்துக்கொண்டால் தமிழர்கள் தமிழிற்குரிய இடத்தை வழங்குகின்றார்களா என்ற வினாவே எஞ்சியிருக்கும்.

இதற்கான விடையை தேடுவோமாயின் அதற்கு சோகமான தகவல்கள் நிறையவே கிடைக்கும். இன்றைய நாகரிக மோகத்தில் தமிழைப் பேசுவதே தரக்குறைவு என நினைக்கின்ற 'தமிழ்' வர்க்கம் ஒன்று உருவாகி வருவதை நாம் காண முடியும்.

எதற்கெடுத்தாலும் தமிழ்மொழிக்கிடையில் ஆங்கிலச் சொற்களை புகுத்துவது தமது கல்வி அறிவின் வெளிப்படுத்துகைக்கு ஓர் வழி என்ற நினைப்பு செம்மொழியாகி தமிழ்மொழிக்குப்பெரும் பாதகமாக அமைந்து விடுகின்றது.

தமிழ் மொழி உரையாடல்களுக்கிடையில் ஆங்கில சொற்களைப் புகுத்தும் மிகமோசமான நிலைக்கு யாழ்ப்பாணம் சென்று கொண்டிருப்பது தமிழ் மொழிசார் வளர்ச்சிக்கு குந்தகமாக அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அதிலும், உறவு முறை மொழிதலில் கூட ஆங்கிலச் சொற்பதங்கள் நடைமுறைக்கு வருகின்றபோது தமிழ் மொழி மட்டுமன்றி உறவு முறை உணர்விற்கும் அது பாதகம் என்பது அவசரமாக உணரப்பட வேண்டிய, உணர்த்தப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று ஆங்கில மொழி என்பது சர்வதேச மொழியாக, -தகவல் தொழில்நுட்பத்தின் ஊடக மொழி க இருப்பது எவராலும் மறுக்கமுடியாத ஒன்று. ஆங்கிலத்தை கற்பதன் மூலமாகவே அறிவியல் வளர்ச்சியில் உயர்வடைய முடியும் என்பது கட்டாயமாகிவிட்டது.

ஆகவே ஆங்கிலத்தை கற்பது மிகமிக அவசியமாகும் ஆனால் ஆங்கிலமொழியின் கற்றல் என்பது தாய் மொழியாகிய தமிழிற்கு அப்பால் இன்னோர் மொழியின் திறனாக இருக்கவேண்டுமே தவிர, ஆங்கில மொழி கற்றலே தமிழ் மொழிக்குப் பாதகமாக அமையக் கூடாதென்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.

மேலும், ஆங்கில மொழியில் உள்ள அறிவியல் நூல்களை தமிழ் மொழியிலும் உருவாக்க மொழியியல் கல்வியாளர்கள் முன்வர வேண்டும்.

ஓர் இனம் தான் சார்ந்த மொழிக்குவழங்குகின்ற முக்கியத்துவத்தை பொறுத்தே அந்தமொழியின் சிறப்பு ஏனைய இனங்களுக்குள் ஊடுருவும் இதுவே உண்மை.

# கடும் மழையினால் யாழ்.மாவட்டத்தில்
# 5,148 குடும்பங்கள் பெரும் பாதிப்பு
# 3,530 குடும்பங்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்தமழையினால் யாழ்.மாவட்டத்தில் 11 பிரதேசசெயலர் பிரிவுகளில் 5 ஆயிரத்து 148 குடும்பங்கள்பெரும் பாதிக்கப் பட்டுள்ளதாக யாழ். மாவட்டசெயலகப்புள்ளி விபரக்கிளை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 217 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 217 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளதுடன் 217 குடும்பங்கள் தத்தமது வீடுகளைவிட்டு வெளியேறி உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் 232 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன தத்தம் வீடுகளை விட்டு வெளியேறி 28 குடும்பங்கள் பொது மண்டபங்களிலும் 13 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 114 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகள் முற்றாகவும் 110 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 82குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 29 வீடுகள் முற்றாகவும்52வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 781 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

263 வீடுகள் முற்றாகவும் 778 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளதுடன் தத்தமது வீடுகளைவிட்டு வெளியேறி 16 குடும்பங்கள் பொது மண்டபங்களிலும் 2ஆயிரத்து 765 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும்தங்கியுள்ளன.அத்துடன் சங்கானை பிரதேசசெயலர் பிரிவில்326 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 21 வீடுகள் முற்றாகவும்117வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளதுடன் 81 குடும்பங்கள் தத்தமது வீடுகளில் இருந்து வெளியேறி உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நெடுந்தீவு செயலர் பிரிவில் 10 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 9 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவில் 735 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன 735 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளதுடன் 324 குடும்பங்கள் தத்தமது வீடுகளில் இருந்து வெளியேறி உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மேலும் கரவெட்டிபிரதேச செயலர் பிரிவில் 475 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 10 வீடுகள் முற்றாகவும் 8வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளதுடன் தத்தமது வீடுகளில் இருந்து வெளியேறி 47 குடும்பங்கள் பொதும்ண்டபங்களிலும் 30 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 165 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 164 வீடுகள் பகுதியாகவும் 7 வீடுகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. 9 குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்பிரிவில் 12 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன 11 வீடுகள் பகுதியாகவும் ஒரு வீடு முற்றாகவும் சேதமடைந்துள்ளதாக செயலக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.(ற-19)

## சொல்ஹெய்ம்...

இதேவேளை எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வது குறித்தும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச)

## புரியாத...

சமாதான முயற்சி தொடரும் என்பதற்கான சமிக்ஞையோ வெளிப்படுத்தப்படவில்லை.

தொடர்கின்ற இத்தகைய நிலையினால் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எரிச்சலடைந்து சலித்தே போய்விட்டார்.

இத்தகையதொரு சலிப்பான நம்பிக்கையற்ற நிலைமையுடனேயே எரிக் சொல்ஹெய்ம் நேற்று நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இதேவேளை சொல்ஹெய்ம் போகும் வழியில் இந்தியா சென்றே நோர்வே செல்வார் என்றும் நம்பகமாகத் தெரியவருகிறது.

(இ-05-09)

# கதையாடல் அரங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்பின் யாழ் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் இணைப்பாளர்களுடன் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் இணைந்து மேற்கொள்ளும் கதையாடல் அரங்கப் பட்டறை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இவ்வரங்கப் பட்டறை மானிப்பாய் வீதியிலுள்ள தியாகசீலன் பூங்காவில் அமைந்துள்ள முன்பள்ளிப் பயிற்சி நிலையத்தில் காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் நடைபெறவுள்ளது. (ச)

## உயர் பாதுகாப்பு...

குடியமர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

ஆனால், மக்களோடு மக்களாக அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளும் சேர்ந்து குடியேறினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று படைத்தரப்பினர் அச்சம் தெரிவித்துள்ளதாகவும் இதனாலேயே இவ் விடயத்தில் உடனடியாக முடிவெடுக்கமுடியாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் விரைவில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும் என்றும் அதன் பின்னர் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் உடனடியாக மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்றும், அது வரை வடக்குக் கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலய மக்களை பொறுமை காக்குமாறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுக்கொண்டுள்ளார் என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் நேற்றிரவு தெரிவித்தார். (இ-04)

## யுத்தத்துக்கு...

டிருப்பதாகவும் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

மேலும் கொழும்பில் இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்று தெரிவித்த கருஜெயசூரியா மூவின மக்களாலும் பெறப்பட்ட இலங்கையின் சுதந்திரம். அவர்களின் ஒற்றுமையின் மூலமே பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார். (இ-15)

## விளையாடச்...

குளிக்கச் சென்ற பெண் ஒருவர் சிறுவன் கேணியில் சடலமாகக் கிடக்கக் கண்டுள்ளார். உடனடியாக அயலவர்களுக்கு தெரிவித்ததையடுத்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் சடலத்தை மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்தனர். அங்கு மரணவிசாரணையை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் என். தங்கராஜா மேற்கொண்டார். பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். மரணவிசாரணையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-52-101)

## ஒலிப்பேழை அறிமுக விழா

இரண்டாம் லெப்.மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைக்கலைஞர் கண்ணனின் இசையில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' பாடல் ஒலிப்பேழை அறிமுக விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளத் தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன்அமுதினியின் தாயார் பாடல் ஒலிப்பேழையின் முதல் பிரதியைப் பெறுவார். ஒலிப்பேழை உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த கலைஞர்கள் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-8)

## நூல் வெளியீட்டு விழா

சுகாதாரக் கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய 'பாலர் பராமரிப்பு' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் கோவிலில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் தயாசோமசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச)

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த
அழகிய தீயே
கா.நேரம் : 10.30,2.30,6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும்
THE MUMMY RETURNS (ஆங்கிலப் படம்)
THE PASSION OF The CHRIST
(இயேசு தேவரின் வாழ்வில் இறுதி 12 மணி நேரக் கதை)

ராஜா, யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
சரத்குமார், வடிவேல், ரிதிகா நடிப்பில்
ஐதீமதி
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (பு.நே)

நிறைத் சனாஸ் (சங்கானை)
ஸ்ரீகாந், சினேகா நடித்த
போஸ்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45 பு.நே)
URASSIC PARK -3
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)

கிறிஸ்மஸ் புத்தாண்டு மலிவு விற்பனை
டிசம்பர் 31 வரை மட்டுமே
யாழ். மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
நீங்கள் வாங்கும் சகல விதமான புடவைகளையும்
விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
லைடன் புடவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P. - 021 222 2381
(c-847)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை
யாழ் . டிப்போ சிற்றுண்டிச்சாலை
கேள்விப் பத்திரம்
மேற்படி சிற்றுண்டிச் சாலையை 01.01.2005 ல் இருந்து நடாத்துவதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
31.12.2004 இற்கு முன்னதாக நேரில் தொடர்பு கொள்ளவும்.
பொது முகாமையாளர்,
வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.
(C/848)

UNIT
எமது கையிருப்புகள்......!!! யாவும் கொழும்பை ஒத்த விலையில் DELL Monitors @ Local Rate
DELL Branded products We Deal only No.1 Products
P III & PIV MOTHER BOARDS
PIII & PIV ATX POWER SUPPLIES
PS2 & USB KEYBOARDS & MOUSE
PS2 & USB MOUSE (WHEEL & OPTICAL)
ALL KIND OF BRANDED & UNBRANDED CDS, FLOPPIES
FLOPPY AND CD COVERS & HOLDERS
சகல PIV கணனிகளும் சலுகையுடன் 3 வருட மாற்றுதலுக்கான முழு உத்தரவாதம்
Products Available @ Colombo Price
Intel Processors
Hard disks (40, 60, 80 & 120 Gbs)
Lower & Higher End International Standard Woofers
Internal & External (USB) Modems
NECK & Head phones
Network Cards, Hubs & Switches
Lower End & High Multimedia Speakers
Lower & Higher End ATX Casings
Wooferகள் 1500/- முதல்
All branded CDROMs, Writers, Combo's
All kinds of Scanners & Printers
All kind of Cooling Fans
All kind of UPSs
All kind of pen drives & Flash Memories
All size of Memories
Computer Tables & Etc.
Free Demo
உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.